கேலக்ஸியின்

விண்மீன்

மின்னிதழ்

செப்டம்பர் 2025 | இதழ் 4

"அரபிகளின் மொழித்தளர்வு...
எகிப்தியர்களின் உரையாடல் கலை...
பிலிப்பைனியர்களின் கீழ்ப்படியும் குணம்..."



அபுல்கலாம் ஆசாத்

நேர்காணல்

www.galaxybs.com

ISBN 978-81-989182-4-6

GALAXY BOOK SELLERS & PUBLISHERS

விண்மீன்
மின்னிதழ்

கல்வி கரையில கற்பவர் நாள்சில
மெல்ல நினைக்கின் பிணிபல
தெள்ளிதின்
ஆராய்ந் தமைவுடைய கற்பவே
நீரொழியப்
பாலுண் குருகின் தெரிந்து.
- நாலடியார்

ஞானமும் கல்வியும் நயத்தல் அரிது
ஞானமும் கல்வியும் நயந்த காலையும்
தானமும் தவமும் தான்செயல் அரிது
- ஔவையார்

பதிப்பாளர்
பாலாஜி பாஸ்கரன்

ஆசிரியர்
பரிவை சே குமார்

இணை ஆசிரியர்
தேவதர்சினி நடராஜன்

வடிவமைப்பு
சென் பாலன்

Published by
Galaxy Book Sellers & Publishers

Print Partners
Printech, UAE

Travel Partner
FJ Tours & Travels, UAE

Galaxy Book sellers & Publishers
www.galaxybs.com
+91 99944 34432

GALAXY BOOK SELLERS & PUBLISHERS

ISBN 978-81-989182-4-6
9 788198 918246

போதை

போதை என்பது காலங்காலமாக இருந்து கொண்டுதான் இருக்கிறது, என்னவோ இப்போதுதான் அது கொண்டு வரப்பட்டது போல் பேசாதீர்கள் என்று ஒருமுறை நண்பர் ஒருவர் சொன்னார். அவர் சொன்னது உண்மைதான் என்றாலும் சமீபத்திய வருடங்களில் போதை எந்தளவுக்கு இளைஞர்களை, குறிப்பாக பள்ளிக்கூட மாணாக்கர்களைத் தன் கோரக்கரங்களில் பிடித்து வைத்துள்ளது என்பதை நம் கண்முன்னே நடக்கும் நிகழ்வுகளை வைத்துப் புரிந்து கொள்ளலாம்.

இன்றைய நிலையில் சரக்கு அடிப்பது என்பதை என்னவோ பெரிய அந்தஸ்து என்பது போல் நினைத்திருக்கிறார்கள். முன்பெல்லாம் குடிப்பவர்களை ஊரே வெறுக்கும், ஆனால் இப்போதெல்லாம் குடிகாரர்களை ஊரே கொண்டாடுகிறது. காரணம் அப்போது ஊரில் ஏதோ சிலர் குடித்தார்கள், இன்றோ ஊரே குடிக்கிறது. இப்போதெல்லாம் வீட்டில் நடக்கும் நல்லது கெட்டதுகளில் முக்கியமான பங்கு வகிப்பது மதுவாகத்தான் இருக்கிறது.

குறிப்பாக, பள்ளிக் கல்லூரி மாணவர்கள் போதையின் பின்னே போனது சமீபத்திய வருடங்களில்தான். பள்ளிகளை ஒட்டியிருக்கும் கடைகளில் இவற்றை மறைத்து வைத்து விற்கிறார்கள் என அவர்களைக் கைது பண்ணி, கடைகளை மூடி என்னென்னவோ செய்தார்கள் என்றாலும் போதைப் பொருட்கள் பள்ளிகளுக்குள் எந்தக் குறையும் இல்லாமல் கிடைத்துக் கொண்டுதான் இருக்கின்றன. பள்ளிகளின் சுவரில் மட்டும் நூறு மீட்டர் சுற்றளவில் போதைப் பொருட்கள் விற்பனை தடை செய்யப்பட்டுள்ளது என்று போட்டிருப்பதைப் பார்க்கும் போது வேதனையான சிரிப்புத்தான் மிஞ்சியது.

ஊர் திருவிழாவிற்காக ஒரு வாரம் விடுமுறையில் போனபோது போதையின் பிடியில் சிக்கி ரோட்டில் அடித்துக் கொண்டு உருண்ட மாணவர்களையும், வேலைக்குப்போக வேண்டிய நேரத்தில் நகரத்தில் இருந்து கிளைச்சாலைகளாகப் பிரிந்து கிராமங்களுக்குப் போகும் பாதைகளில் அமர்ந்து குடித்துக் கொண்டிருப்பவர்களையும், எதாவது ஒரு வேலையாகக் கூப்பிட்டால் எனக்குச் சரக்கு வாங்கித் தர்றியா என்ற கேள்வியை முன் வைக்கும் மனிதர்களையும், கட்டிட வேலைகளில் போது கொத்தனார்களுடன் சேர்ந்து சரக்கடிக்கும் சித்தாள்களையும், விருந்துக்கு வந்தவர்களுக்கு சரக்கு ஊற்றிக் கொடுக்க ஆட்களை நியமித்து வைத்திருக்கும் ஊர் பிரபலங்களையும், ஊருக்கு வந்திருக்கீங்க பாட்டில் கீட்டில் எதுவும் கொண்டு வரலையா எனக் கேட்கும் உறவுகளையுமே அதிகம் பார்க்க முடிந்தது.

'இப்பல்லாம் சரக்கடிக்கிறதை விட்டுட்டேன் மச்சான். எம்புட்டு நாளைக்குத்தான் அப்புடியே திரியிறது, நமக்கும் குடும்பம் இருக்குல்ல' என்று போனமுறை சொன்ன உறவுக்கார மச்சான் ஒருவர் இந்தமுறை பார்க்கும் போது முகமெல்லாம் ஒடுங்கிப் போய், சம்பந்தமில்லாமல் சத்தம் போட்டுக் கொண்டு திரிந்தார். சரக்கடிக்கிறதை விட்டுட்டேன்னு சொன்னாரு... அப்பறம் ஏன் இப்படிச் சண்டை போடுறாரு எனத் தம்பி ஒருவரிடம் கேட்டபோது 'அண்ணே சரக்கத்தான் விட்டிருக்கார். இப்பல்லாம் கஞ்சா மட்டுந்தான். இதுக்கு இது சரக்கே அடிச்சிருக்கலாம்' என்றார். கஞ்சா என்பது மிக அரிதாகத்தான் கிடைக்கும் என்பது போய் இப்பல்லாம் கஞ்சா சுலபமா, அதுவும் கிராமங்களுக்குள் எப்போது வேண்டுமானாலும் கிடைக்கும் என்ற நிலைக்கு ஊர் வந்து சிலகாலம் ஆகிவிட்டது என்பதுதான் கொடுமை.

ஊர்ல கூத்து வைத்திருந்தோம், அதைப் பார்ப்பதற்கு நிறையக் கூட்டம் வந்திருந்தது. அதில் 90% ஆட்கள் போதையில்தான் இருந்தார்கள். கத்தலும் பேச்சுமாய் இருந்தார்கள். ஒரு பதினேழு, பதினெட்டு வயது மதிக்கத்தக்க பையன் ஒருவன் நிறை போதையில் வந்து அரங்கிற்கு முன்னே வந்து அமர்ந்து, உட்காந்திருக்கும் போதே ஆட்ட நிலையில் இருந்து கொண்டு கத்திக் கொண்டே இருந்தான். பேச்சோடு பேச்சாக நாடக நடிகர் இராதாகிருஷ்ணன் அவனைத் திட்டினாலும் அவன் அப்படியே தொடர்ந்து பண்ணிக் கொண்டிருக்க, காவல்துறையிடம் இவனை அங்கிட்டு தூக்கிட்டுப் போங்க சார் என்று சொன்னார். இவர்களை எல்லாம் குடும்பத்தில் உள்ளவர்கள் கண்டிப்பார்களா இல்லையா என்ற கேள்வி எனக்குள் எழுந்த அதே நேரத்தில் இன்றைய உலகில் நம் பிள்ளைகளை இந்தப் போதை மேகங்களுக்கு இடையே எப்படிச் சரியான பாதையில் பயணிக்க வைக்கப் போகிறோம் என்ற பயம் உண்டானது.

நம்ம ஊர்ல மட்டுமா..? உலகத்துலயே இப்படித்தான் இருக்கு தெரியுமா..? எனப் புள்ளி விபரக் கணக்குப் பேசிக் கொண்டு, பிரபலங்கள் மேடையில் நாங்க அப்ப தண்ணி அடிச்சிட்டு பொண்ணுகளைப் பற்றிப் பேசுவோம் எனச் சொல்லும் போது சிரித்துக் கொண்டு, போதை என்பது தேவை என்பதாய் மௌனம் காக்கும் மனிதர்களை என்ன சொல்வது..? அடுத்த வீட்டுல என்னமோ நடக்கட்டும் நம்ம வீட்டை நாம் பாதுகாப்பாய் வைத்திருப்போம், சாதிக்க வேண்டிய இளைஞர்களை நல்ல வழியில் கொண்டு செல்ல, போதையை ஒழிப்போம் என்ற எண்ணம் நமக்கு, குறிப்பாக நம் அரசியல்வாதிகளுக்கு வராத வரை போதை மெல்லமெல்ல இல்லையில்லை... வேகமாக இளைஞர்களை தனது பலி பீடத்தில் ஏற்றி மகிழத்தான் செய்யும்.

பரிவை சே குமார்

இதழில்....

சிறுகதைகள்:

செஞ்சோற்றுக் கடன் தீர - மாலா மாதவன்

ராட்சசி - லலிதா சங்கர்

ஓ.கே. கண்மணி - விஜி சம்பத்

மாயநிழல் (பகுதி 1 / 2) - அன்பாதவன்

நேர்காணல்:

'அரபிகளின் மொழித்தளர்வு...' எழுத்தாளர் அபுல்கலாம் ஆசாத்
- தேவதர்ஷினி நடராஜன்

கட்டுரை:

நிஸ்வா என்றொரு பழமையான நகரம்!!! (பகுதி-2) - இளங்கோ ராமசாமி

புத்தகப் பார்வை:

உன்மத்தம் - சௌம்யா ராஜாராம்

நந்தனின் நாலு கட்டு வீடு - அ. கௌரி சங்கர்

குறுந்தொடர்:

அந்த மாலை (பகுதி - 3) - ஸ்ரீராம்

ஒரு பக்கக் கதைகள்:

பகிர்வு - புனிதா பார்த்திபன்

தேர்வு முடிவு - சுதா கணபதி

கண்ணாளனே..! - மலர்மதி

கவிதை:

ஊதக்காத்து - உமா ஸ்வாமிநாதன்

நிஸ்வா என்றொரு பழமையான நகரம்!!!

இளங்கோ ராமசாமி

பகுதி -2 : நிஸ்வாவின் நிழலில் சந்தைக்குப் போவோமா?

ஓமானின் கலாச்சாரத் தலைநகரான நிஸ்வா என்ற புராதான நகரின் இதயப் பகுதி "'சூக் நிஸ்வா" (Souq Nizwa) என்றறியப் படுகிறது. "'சூக் " என்றால் அரேபிய மொழியில் சந்தை என்று பொருள். பல நூற்றாண்டுகளுக்கு முன்பு அதாவது ஓமானில் இஸ்லாம் வேரூன்றியதற்கு முன்பே இந்நகரம் மஸ்கட்டிற்கும், ஓமானையும் ஏமனையும் இணைக்கும் புகழ் பெற்ற தோஃபார் (Dhofar) மாகாணத்திற்கும் இடையேயான ஒரு முக்கியமான இணைப்புப் புள்ளியாக இருந்திருக்கிறது.

பண்டைய காலத்தில் சூக் என்றழைக்கப்படும் இச்சந்தைகள் தொலை தூரப் பயணங்களை மேற்கொள்ளும் வர்த்தகர்கள் கூடி, தங்கி, செய்திகளையும் பண்டங்களையும் பரிமாறிக் கொள்ளும் முக்கியமான பொருளாதார மற்றும் அதிகார மையங்களாகச் செயல்பட்டு வந்திருக்கின்றன.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே ரோமப் பேரரசு ஆசியாவிலிருந்து பட்டு, பீங்கான், தேநீர், போன்ற பொருட்களையும் அரேபியாவில் இருந்து சாம்பிராணி, மணிக் கற்கள், வாசனைப் பொருட்கள் போன்றவற்றையும் பெருமளவில் இறக்குமதி செய்தது. பதிலுக்குக் குதிரைகள், தங்கம், வெள்ளி, திராட்சை ரசம், ஆலிவ் எண்ணை போன்றவற்றை ஏற்றுமதி செய்தது. இந்தப் பட்டு (Silk) மற்றும் சாம்பிராணி (Incense) வர்த்தகத் தடங்கள் உருவாகின.
அப்படிப் பட்ட வணிகத் தடங்கள் நெடுக முக்கிய நகரங்களில் பெரும் சந்தைகள் உருவாகின. மத்திய ஆசியாவில் இஸ்லாம் வேரூன்றித் தழைக்க ஆரம்பித்த போது "சூக்" எனும் சந்தைகள் ஒழுங்கு படுத்தப்பட்டுக் கட்டமைக்கப்பட்டன. இவை 'பஜார்' என்றும் அறியப்படுகின்றன.

பெரும்பாலும் நகரின் மையத்திலும், நகரின் முக்கிய மசூதிக்கு அருகிலும் நிர்மாணிக்கப் பட்ட இப்படிப்பட்ட பரந்து விரிந்த வணிக வளாகங்கள், அரசியல் மற்றும் கலைகள் வளரக் கூடிய சக்தி வாய்ந்த அதிகார மையங்களாக உருவெடுத்தன. டமாஸ்கஸ், பாக்தாத், கெய்ரோ போன்ற நகர்களின் பெரும் சந்தைகள் உலகப் புகழ் பெற்றவை.

“ சூக்” எனப்படும் இந்த அரேபியச் சந்தைகளை நமது ஊரின் வாரத்தில் ஒரு நாள் கூடும் சந்தைகளோடு ஒப்பிட முடியாது. நமது ஊரின் வாரச் சந்தைக் கலாச்சாரமே கிட்டத்தட்ட மறைந்து விட்டது. சிறு வயதில் நான் என் அப்பச்சியோடும், அம்மாயியோடும் அவர்கள் கைகளைப் பிடித்துக் கொண்டு குதூகலத்தோடு ஞாயிற்றுக் கிழமைச் சந்தைக்குச் சென்று முறுக்கும், பொரிகடலையும் வாங்கி வந்த அனுபவங்கள் என் மகளுக்கு வாய்க்கவில்லை. அப்பொழுதெல்லாம் அம்மாயி செட்டியாரிடம் எண்ணையைச் சட்டியில் வாங்கி வருவார். எனக்காவது நாடார் கடைக்கோ செட்டியார் கடைக்கோ போய் மளிகை சாமான்களும், காய் கறிகளும் வாங்கி வந்த அனுபவம் உண்டு. அம்மாவோடும் அப்பாவோடும் காய்கறிச் சந்தைகளுக்குப் போன அனுபவமும் உண்டு. ஆனால் என் மகளெல்லாம் ஒரு நாளும் சந்தைக்குப் போனதில்லை. இப்பொழுதெல்லாம் 10 ரூபாய்க்குக் கறி வேப்பிலை வேண்டு மென்றால் கூட ஸ்விக்கியில் ஆர்டர் போட்டு விடும் வசதி வந்து விட்டது.

இப்படிப் பட்ட சூழலில நமது ஊர் கிராமத்து வாரச் சந்தைகளின் அனுபவத்தையும், பண்டைய அரபு தேசங்களின் நிரந்தரச் சந்தை அனுபவங்களையும் ஒருங்கே கிடைக்கப் பெறும் கிட்டத்தட்ட உலகின் மிகவும் தனித்துவமான சந்தை என நிஸ்வாவின் வெள்ளிக் கிழமைச் சந்தையைக் கூறலாம்

நிஸ்வா சூக்கானது, ஒரு அழகிய மசூதிக்கும், புராதானமான மிகப் பெரிய நெடுந்துயர்ந்த வட்ட வடிவக் கோட்டைக்கும் அருகில் அமைந்திருக்கிறது. நாடெங்கிலும் பல்வேறு பெரிய கோட்டைகள் இருந்தாலும் ஓமானில், நிஸ்வாவின் கோட்டை தனித்துவமானது. அதே போல அரபு நாடுகளிலும் ஆப்பிரிக்காவிலும் பல நூற்றாண்டுகளாகத் தொடர்ந்து செயல்பட்டு வரும் சூக்குகள் இருந்தாலும் நிஸ்வா சூக் வித்தியாசமானது.

கோட்டைக்கும், சந்தைக்கும் பின்புறமிருக்கும் குறுகிய சந்துகளைக் கொண்ட குடியிருப்புப் பகுதியில் பேரீட்சைத் தோப்புகளின் ஊடே பல பழைய சிதிலமடைந்த மண் வீடுகளைக் காண முடியும். அவற்றில் சிலவற்றை அவற்றின் பழமை மாறாமல் புதுப்பித்து, நவீன வசதிகள் கொண்ட தங்கும் விடுதிகளாக மாற்றி வைத்திருக்கின்றனர். அப்படிப்பட்ட அழகிய விடுதியொன்றில் தான் உங்களை கடந்த அத்தியாயத்தின் ஒரு மதிய வேளையில் இறக்கி விட்டுவிட்டுச் சென்றிருந்தேன்.

நீங்களும் பயணக் களைப்பு தீர நன்கு உறங்கி எழுந்து ஒரு குளியலைப் போட்டு விட்டு சந்தையைச் சுற்றிப் பார்க்கத் தயாராக இருப்பீர்கள் என நம்புகிறேன்.

வாருங்கள் மெல்ல நடந்து கோட்டைக்கு அருகே உள்ள Tamrah என்ற மொட்டை மாடி கஃபே வுக்குப் போய் ஒரு காபியோ, டீயோ குடித்து விட்டு அதன் பிறகு ஊரைச் சுற்றுவோம். அந்தக் கஃபேயில் இருந்து பார்த்தால் பருந்துப் பார்வையில் நிஸ்வா கோட்டையையும், சூக்கையும், சுற்றிலும் உள்ள வீடுகளையும், பசுமை மாறா பேரீட்சைத் தோப்புக்களையும் பார்த்து ரசிக்கலாம். அந்தக் கஃபேயில் ஐஸ் கட்டிகள் மிதக்கும் மாதுளைத் தேநீர் எனக்கு மிகவும் பிரியமானதொன்று. தேநீரையும் சிற்றுண்டியையும் முடித்துக் கொண்டு கீழிறங்கி மெல்ல கோட்டைப் பகுதியை விட்டு வெளியே சென்றால் மிகவும் பிஸியான சாலையைப் பார்க்கலாம். பரபரப்பாக செல்லும் வாகனங்களையும், பல விதமான மனிதர்களையும் வேடிக்கை பார்த்துக் கொண்டே நடந்தால் ஒரு வறண்ட ஆற்றுப் படுகையின் வலப்புறம் நூற்றுக் கணக்கான கார்கள் நிறுத்தப் பட்டிருப்பதைக் காணலாம்.

இடது புறம் பார்த்தால் நிறைய ஓமானிகள் பெரும் ட்ரக்குகளில் இருந்து பெரும் பெரும் வண்ண வண்ண அழகிய தரை விரிப்புகளைக் கடை பரப்புக் கொண்டிருப்பதைக் காணலாம். நாட்டு மருந்துக் கடை, அலுமினியப் பாத்திரக் கடை என நம்மூரின் வாரச் சந்தைகளை நினைவுறுத்தும் விதவிதமான கடைகளை விரிப்பதில் மும்முரமாக இருக்கும் ஓமானிகளை ஒவ்வொரு வியாழக் கிழமை மாலை தோறும் தவறாது காண முடியும். அங்கிருந்து சற்றே கிழக்கு நோக்கி நடந்தால் தங்களது கார்களை விற்க விரும்புபவர்கள் அவற்றைக் கொண்டு வந்து நிறுத்தி விட்டு, விலை, வாகனம் பற்ற்றிய விவரங்கள் மற்றும் தொடர்பு எண் உள்ளிட்ட அனைத்து விவரங்களையும் எழுதி காரின் முன் மற்றும் பின்புறக் கண்ணாடிகளில் ஒட்டிவிட்டுச் செல்வதைக் காண முடியும். “”கத்திரிக்கா முத்தினா சந்தைக்கு வந்து தான ஆவணும்?” என்ற சொலவடைக்கு இணங்க பென்ஸ், BMW, Audi, மினி கூப்பர் என விதவித மான கார்களை நம்ப முடியாத விலைகளில் காண முடியும்.

அப்படியே சாலையைக் கடந்து இடது புறம் சென்றால் கிழக்கு ஓரமாக ஏழெட்டு வண்டிகளில் பரபரப்பாக சுடுவான் சுட்டு விற்றுக் கொண்டிருக்கும் ஓமானிகளைக் காண முடியும். கோழி, ஆடு, மாட்டிறைச்சி மற்றும் மக்காச் சோளம் என பல ரக

சுடுவான் கடைகள், இஞ்சியும் எலுமிச்சையும் கலந்த கரும்புச் சாறு விற்பவர் என நம்மூர் வியாபாரிகளைப் போலவே இங்கும் காண முடியும்.

வரிசையாக நிறுத்தப் பட்டிருக்கும் சந்தைக்கு வந்திருக்கும் வாடிக்கையாளர்கள் மற்றும் வியாபாரிகளின் பலதரப்பட்ட கார்களின் ஊடே நடந்து மணல் வண்ணத்தில் உயர்ந்து நிற்கும் பெரும் மதிற் சுவர்களின் பிரம்மாண்டமான மரக் கதவுகளைக் கடந்து மெள்ள நடந்தால் வரிசையாக இருக்கும் அழகிய சிறு சிறு கடைகளை வேடிக்கை பார்ப்பது கண்களுக்கும் சிந்தைக்கும் விருந்தாக இருக்கும். இதுவரை அரேபிய அல்லது ஆப்பிரிக்க சந்தைகளைக் கண்டிராதவர்களுக்கு இது மிகப் பெரும் குதூகலத்தை அளிப்பது சர்வ நிச்சயம்.

வழியெங்கும் அழகிய வேலைப் பாடுகள் நிறைந்த மண் பானைகளும், சாம்பிராணித் தூபக் கால்களும், நெகு நெகுவெனப் பளபளப்பேற்றப்பட்ட பூண் போட்ட கைத்தடிகளும், பனை ஓலையில் வேயப்பட்ட பாய்களும், வெள்ளி நகைகளும், ஓமானின் சின்னங்கள் பொறிக்கப்பட்ட நினைவுப் பரிசுகளும், வண்ண வண்ண அஞ்சலட்டைகளும், ஓலைக் கூடைகளிலும், சாக்குகளிலும் அடுக்கி வைக்கப் பட்டிருக்கும் பல வண்ண மசாலாப் பொருட்களும், தானியங்களும், சாம்பிராணிப் பாட்டில்களும், கயிறுகளும், தலைவிரிப்புகளும், மகளிர் அணியும் விதவிதமான ஆபரணங்களும் அழகாக அடுக்கி வைத்திருப்பது நாம் ஒரு புகழ் பெற்ற சுற்றுலாத் தளத்தில் இருக்கிறோம் என்பதற்குக் கட்டியம் கூறும்.

மாலை மங்கி இருள் சூழத் துவங்கும் வேளையில் மஞ்சள் சர விளக்குகளின் ஒளியில் பாரம்பரிய ஆடையணிந்த ஓமானிகளும், பணி நிமித்தம் ஓமானில் வாழும் குடியேறிகளும் பல்வேறு நாடுகளில் இருந்து வந்திருக்கும் சுற்றுலாப் பயணிகளும் நிதானமாக நடை போடுவதையும், அவர்கள் முகத்தில் தவழும் நிம்மதி கலந்த மகிழ்ச்சியையும் பார்க்கப் பார்க்க நமக்குள்ளும் மிக மகிழ்ச்சி ஊற்றெடுக்கும். சந்திர வளையமாக இருக்கும் கடைகளுக்குள் புகுந்து வெளியே வரும் போது மறக்காது அழகாக அடுக்கி வைக்கப் பட்டிருக்கும் பானைகளுக்கு முன் நின்று படம் பிடித்துக் கொள்ள வேண்டும்.

மேற்குக் கடைசியில் இருக்கும் பெரிய கடையில் அணிவகுத்து நிற்கும் வித விதமான வெள்ளிப் பூண் போட்ட கைத்தடிகளையும், பழைய நாட்டுத் துப்பாக்கிகளையும், பெரிய ஓமானி போர் வாள்களையும், கஞ்சர் எனப்படும் இடுப்புப் பட்டையோடு இணைக்கப்பட்ட அலங்காரமான வெள்ளிக் குறுவாள்களையும், மணிக் கற்களையும், பெரிய பெரிய வெள்ளி ஆபரணங்களையும், வித விதமான பழங்காலப் பொருட்களையும் வேடிக்கை பார்த்து விட்டு எதிர்ப்புறம் உள்ள காய்கறி சந்தைக்குள் நுழையலாம்.

ஒரு சில வருடங்களுக்கு முன்பு வரை காய்கறிகள் மட்டுமே விற்கப் பட்டுக் கொண்டிருந்த குளிரூட்டப்பட்ட சந்தை, இப்போது பெரும்பாலான கடைகளில் பரிசுப் பொருட்கள், நறுமணத் தைலங்கள், திண்பண்டங்கள், அல்வா கடைகளால் நிறைந்து பெரிதும் உரு மாறிவிட்டது. அனைத்துக் கடைகளும் ஓமானிகளால் மட்டுமே நடத்தப் படுகின்றன.

காய் கறி சந்தையின் வட புற வாசலில் நுழைந்து தென் கோடியை அடைந்தால் நிஸ்வாவின் மிகப் பெரியதும் புகழ் பெற்றதுமான “அல் ஸைஃபி” ஓமானி அல்வா கடையின் பரந்த வளாகத்தை அடையலாம். முதன் முறை நிஸ்வாவிற்கு

வரும் அனைவரும் அங்கு அலங்காரத்திற்காக வைக்கப் பட்டுள்ள அல்வா கிண்டும் பெரிய சட்டியின் முன் நின்று படம் பிடித்துக் கொள்ளத் தவறுவதில்லை.

அந்தப் பெரிய கடையில் தீரத் தீர சாம்பிளுக்கு வைக்கப் பட்டிருக்கும் ஸ்பெஷல், நட்ஸ், குங்குமப்பூ என்ற பல ரக அல்வாக்களையும் வேண்டிய மட்டும் எடுத்து சுவைத்துப் பார்க்கலாம். நாவின் தித்திப்பைக் குறைக்க அங்கேயே ப்ளாஸ்க்கில் வைக்கப் பட்டிருக்கும் காவா எனப்படும் சர்க்கரை போடாத அரேபிய கடுங்காப்பியை ஊற்றிக் குடித்துக் கொள்ளலாம்.

அந்த அல்வாக் கடையின் நுழைவாயிலில் இருக்கும் படியில் ஏறி முதல் தளத்திற்குச் சென்றால் கலைப் பொருட்களையும், வண்ண வேலைப்பாடுகளால் அலங்கரிக்கப்பட்ட பீங்கான் தட்டுக்களையும், சரவிளக்குகளையும் ஆசைதீரக் கண்டு கண்களுக்குள் நிறைத்துக் கொள்ளலாம்.

நிஸ்வா சூக்கை விட இது போன்ற பழமையான, அரிய கலை பொருட்களை விற்கும் கடைகள் மஸ்கட்டின் '"மத்ரா சூக்" கில் தான் அதிகம். அதை விட உயரம் குறைவான, குறுகலான, வளைந்து நெளிந்து நீண்டு பல கிளைகளாகப் பிரிந்து கிடக்கும் '"மத்ரா சூக்" தான் ஓமானில் உள்ளதிலேயே அழகானாதும், மிகப் பெரியதானதுமாகும்.

இந்தக் காய்கறி சந்தையின் தென்புற வாசல் வழி வெளியேறினால் பேரீட்சை பழச் சந்தை தென்படும். முன்பு பல்வேறு வியாபாரிகள் வசம் இருந்த இடம் இப்போது ஒரு ஒற்றைக்கடையாக நவீன அலங்காரங்களுடன் மிளிர்கிறது. அங்கும் ஒரு ஏழெட்டு வகை பேரீட்சைகளை சுவைத்துப் பார்ப்பதற்காகப் பெரிய பெரிய தொட்டிகளில் நிறைத்து வைத்திருப்பர். ஒவ்வொன்றாக எடுத்து சுவைத்துப் பார்த்து விட்டு நமக்குப் பிரியப் பட்ட ரகத்தை வேண்டிய அளவு வாங்கிக் கொள்ளலாம். அல்லது கிழக்கு மூலையில் அவர்கள் ஏற்படுத்தி வைத்திருக்கக் கூடிய ஒய்வெடுக்கும் கூடாரத்தில் கூடி அமர்ந்து காவாவைக் குடித்துக் கொண்டே கதைத்துவிட்டுக் கிளம்பலாம்.

அந்தக் கடை முழுவதும் பேரீட்சைகளில் செய்த இனிப்புப் பலகாரங்கள், தேங்காய் மிட்டாய், கடலை மிட்டாய், பேரீட்சை சிரப், மிட்டாய்கள், சாக்லேட்டுகள் என நிறைந்து கிடக்கும். அங்கிருந்து வெளியே வந்தால் எதிர்புறம் மீன் சந்தை இருக்கும். ஆனால் இருட்டி விட்டால் மீன் சந்தை வெறிச்சோடிவிடும்.
இதுவரை நாம் கண்ட அனைத்தையும் ஓமானின் பிற சந்தைகளிலும் பார்க்க முடியும். ஆனால் ஓமானிலோ அல்லது வேறு எந்த அரபு தேசத்திலோ காண முடியாத ஆடு மற்றும் மாட்டு சந்தை மிகவும் தனித்துவமானது. பல நூற்றாண்டுகளுக்கு முன்பு எப்படி ஆடு மாடுகளைச் சந்தைக்கு ஓட்டி வந்து ஏலம் கூறினார்களோ அதே முறை இன்று வரை தொடர்வது இந்தச் சந்தையில் மட்டுமே.

அது மட்டுமின்றிப் பிற நாடுகளில பதிது போல நடத்தப்படும் புகழ்பெற்ற குதிரை சந்தை ஒட்டகச் சந்தைகளெல்லாம் சுற்றுலாப் பயணிகளைக் கவர்வதற்கான வெறும் கண்காட்சிகள் மட்டுமே. அல்லது அவை ஒரு வருடத்தின் ஏதாவது ஒரு சில நாட்களில் மட்டும் கூடும் பண்பாட்டு, கலாச்சார அல்லது ஆன்மீக நிகழ்வாக இருக்கக் கூடும்.

ஆனால் நிஸ்வாவில் வெள்ளிக்கிழமை காலை கூடும் கால்நடை சந்தை மக்களின் வாழ்வியல் தேவைகளுக்கானது. அங்கு கால்நடைகளின் உரிமையாளகள் தாங்கள் விற்க விரும்பும் உயிரினங்களைப் பிடித்துக் கொண்டு ஏலம் விடப்படும் மைதானத்தின் வட்ட வடிவ கூடாரத்தை தங்கள் விலையைக் கூவிக் கொண்டே சுற்றிச் சுற்றி வருவர். கூடாரத்தின் உள்ளே இருந்து விலங்குகளை வாங்க வந்த ஓமானிகள் நோட்டம் இடுவர். தங்களுக்குத் தோதான ஆடோ மாடோ சுற்றுக்கு வரும் போது அவர்களும் வட்டப் பாதைக்குள் இறங்கி விலங்குகளைப் பரிசோதித்துப் பேரம் பேசி முடிப்பதை வெள்ளி தோறும் காண முடியும்.

ஏலம் நடக்கும் இடத்தைச் சுற்றிலும் பன்னாட்டு சுற்றுலாப் பயணிகளின் கூட்டம் நிரம்பி வழியும். காலை பொழுது புலர்ந்ததும் துவங்கும் இந்தக் கால்நடை சந்தை குறைந்தது இரண்டு முதல் மூன்று மணி நேரம் வெகு சுறு சுறுப்பாக இயங்கும். இப்படி இந்தச் செயற்கை நுண்ணறிவு யுகத்திலும் தங்கள் அன்றாடத் தேவையை நிறைவேற்றிக் கொள்ளும் பொருட்டு தங்கள் வாழ்க்கை முறையோடு பின்னிப் பிணைந்திருக்கும் உண்மைத் தன்மையே நிஸ்வா சூக்கின் தனிச் சிறப்பு.

அதே போல வெள்ளிக் கிழமை காலை காய்கறிச் சந்தையின் கீழ்புறம் மீன் சந்தையை ஒட்டி சுற்று வட்டாரத்தில் இருந்து வெள்ளிக் கிழமை மட்டும் வரும் விவசாயிகள் தங்கள் உற்பத்தியைத் தரையில் கடை பரப்பி விற்றுக் கொண்டிருப்பர். அங்கேயே செல்லப் பிராணிகளின் மற்றும் பறவைகளின் விற்பனையும் கொடி கட்டிப் பறந்து கொண்டிருக்கும். பத்து வயது சிறுவர்கள் முதல் பழுத்த தும்பைப் பூ போன்ற நீண்ட தாடியுடன் கூன் தள்ளிய பெரியவர்கள் வரை தங்கள் தேசிய உடையான டிஷ்டாஷாவையும் தலைப்பாகையையும் அணிந்து சந்தையில் ஆர்வத்தோடு வியாபாரம் செய்யும் ஓமானிகளைப் பார்க்கும் நம்மையும் அவர்களது உற்சாகம் தொற்றிக் கொள்ளும்.

ஓமானிகளுக்குப் பிடித்த மற்றொரு மிக முக்கியமான பண்டம் தேன். அதனால் பாட்டில்களில் தேன் விற்கும் நிறைய ஓமானிகளையும் காண முடியும். இதையெல்லாம் வேடிக்கை பார்த்துக் கொண்டே முதல் நாள் மாலை பார்த்த வடபுறத்தில் சந்திர வளையமாக அமைந்திருக்கும் கடைகளைக் கடந்து கோட்டை இருக்கும் பகுதிக்குள் நுழைத்தால் அங்கே மரத்தடியில் குமித்து வைத்து விற்கப் பட்டுக் கொண்டிருக்கும் துப்பாக்கிச் சந்தையைக் காண முடியும். பெரும்பாலும் பழைய நாட்டு ரக ஒற்றைக் குழல் துப்பாக்கிகளும் அவைகளுக்கான தோட்டாக்களும், தோட்டாக்களைச் செருகிக் கொள்ளத் தேவையான இடுப்புப் பட்டைகளும் அங்கே விற்பனைக்குக் கடை விரிக்கப் பட்டிருக்கும்.

அந்தத் துப்பாக்கிகளில் ஒன்றைக் கையிலேந்தி மனதிற்குள் நம்மை வீரப்பனாகக் கற்பனை செய்து கொண்டு குறிபார்ப்பதைப் போன்ற போஸில் ஒரு படம் பிடித்துக் கொண்டால் சந்தைச் சுற்றுப்பயணம் இனிதே நிறைவுறும்.

அப்படியே அருகில் இருக்கும் ஏதாவது ஒரு கஃபேயில் அமர்ந்து பழச் சாறோ, சுலைமானியோ பருகிக் களைப்பாறிக் கொண்டிருங்கள். அதற்குள் அடுத்த 'விண்மீன்' தயாராகிவிடும். அந்த இதழில் நிஸ்வாவின் புகழ் பெற்ற கோட்டையைச் சுற்றிப் பார்க்கலாம்.

தொடர்ந்து பயணிப்போம்....

அரபிகளின் மொழித்தளர்வு... எகிப்தியர்களின் உரையாடல் கலை... பிலிப்பைனியர்களின் கீழ்ப்படியும் குணம்...

– எழுத்தாளர் அபுல் கலாம் ஆசாத்

தேவதர்ஷினி நடராஜன்

உங்களுக்கு எழுத்து மீதான ஆர்வம் வந்தது எப்பொழுது?

பள்ளிக்கூட நாள்களிலிருந்து எழுத்தின் மீது ஆர்வம் இருந்தது. கட்டுரைகளை ஒழுங்காக எழுத நினைக்கும் எல்லா மாணவர்களுக்கும் இயல்பாக வருகின்ற ஆர்வம் என்பதற்கு மேல் அதில் ஏதும் இல்லை.

குறிப்பாகச் சொல்லவேண்டுமெனில், நான் படித்த கெல்லெட் உயர்நிலைப் பள்ளியில் (இப்போது கெல்லெட் மேல்நிலைப் பள்ளி) திருக்குறள் போட்டிப் பரிசு நிதிக் குழு என ஓர் ஆசிரியர் குழு இயங்கியது. திருக்குறளை மையப்படுத்தி பேச்சுப் போட்டிகள் நடத்திப் பரிசு கொடுப்பார்கள். எட்டாம் வகுப்பில் திருக்குறள் பேச்சுப் போட்டியில் முதன் முதலாகக் கலந்துகொண்டேன். அப்போது அந்தச் சிற்றுரையை எழுதக் கற்றுக்கொண்டதில் இருந்து ஆர்வம் தொடங்கியது.

எட்டாம் வகுப்பில் இருந்து எழுத்தார்வம் இருந்தது எனச் சொல்லலாம்.

நீங்கள் எழுதிய நாவல்களில் அல்லது நூல்களில் உங்களுக்கு பிடித்தது எது?

நான் எழுதியவற்றில் எனக்குப் பிடித்தது 'வளையம்' என்னும் குறுநாவல். எனக்கு மிகவும் பிடித்த சண்டைக்கலையை விவரிக்க அந்தக் குறுநாவலின் முதன்மைக் கதாபாத்திரங்களை சண்டைக்கலைஞர்களாக அமைத்தேன். மற்போர், குத்துச்சண்டை, கராத்தே, முவே-தாய் (தாய்லாந்தின் சண்டைக்கலை) இந்த நான்கு சண்டைக்கலைஞர்கள் குறுநாவலை நகர்த்திச் செல்வார்கள். நான் எழுதியவற்றில் எனக்குப் பிடித்தமான கதைக்களமும் மொழியும் அதில் அமைந்துள்ளன.

என்றேனும் வளையத்தை விரித்து நாவலாக எழுதும் எண்ணமும் உண்டு.

இலக்கிய விருது (ஆறுதல் பரிசு) பெற்ற உடல் வடித்தான் நாவலை பற்றி கூறுங்கள்.

வாடகைக்கு ஆட்டோ எடுத்து ஓட்டும் இளைஞனுக்குப் போகிறபோக்கில் ஓர் அரசியல்வாதி வேலை வாய்ப்புக் கனவை விதைக்கிறார். ஆணழகனாக உருவாகிப் போட்டிகளில் வெற்றி பெற்றால், விளையாட்டுத் துறை இடஒதுக்கீட்டில் அரசு வேலைகூடக் கிடைக்கலாம் என்று அவர் சொல்ல, அந்த ஆட்டோ ஓட்டும் இளைஞன் அதைத் தானும் முயற்சி செய்தால் என்னவென நினைத்து உடற்பயிற்சி உலகிற்குள் நுழைகிறான். புரத உணவுச் செலவு, ஆட்டோ நிறுத்த அரசியல்கள், விதியின் விளையாட்டு, ஒரு முஸ்லிம் இளைஞன் மேடையேறித் தன் உடலைக் காட்டுதல் இஸ்லாத்தில் கூடுமா? கூடாதா? என்னும் மார்க்கக் கேள்விகள், அரசு வேலை வாய்ப்புக்காகக் குறிப்பிட்ட வயதுக்குள் தேசிய அளவில் ஆணழகன் போட்டியில் பதக்கம் பெறவேண்டிய கட்டாயம், எனப் பல அழுத்தங்களுடன் போராடி அவன் வெல்கிறான்.

உடல் வடிப்பதில் இரண்டு வகையான ஆணழகர்களை நீங்கள் பார்ப்பீர்கள். வசதியான பின்புலத்தில் தன்னுடைய புரத உணவுக்கும் துணை உணவுக்கும் ஆகும் செலவுகள் ஒருபொருட்டாக இல்லாத ஆணழகர்கள் ஒரு வகை. தன்னுடைய உடல் வடிக்கும் ஆர்வத்துக்குத் தன் வருமானத்தில் குறிப்பிட்ட பகுதியை உணவுக்காகச் செலவழித்து எளிமையாக வாழும் ஆணழகர்கள் இன்னொரு வகை. ‘கைக்கும் வாய்க்கும் சரியாக இருக்கிறது’ என்னும் வழக்குச் சொற்றொடர் இவர்களுக்குப் பொருந்தும். உடல் வடித்தான் நாவல் இந்த இரண்டாம் வகை ஆணழகனைப் பேசுகிறது.

உடல் வடிக்கும் ஒருவன் கதாநாயகனாக இருப்பதால் நாவலில் உடற்பயிற்சிகளையும், ஆணழகன் போட்டிகள் தொடர்பானவற்றையும் விவரமாக எழுதினேன். சென்னையில் மட்டுமல்லாமல், துபாயிலும் உடற்பயிற்சி ஆசிரியர்களுக்கு இருக்கும் வேலைவாய்ப்பை நாவலின் வழியாகச் சொன்னேன்.
புதிய களத்தின் பின்னணியில் நாவல் அமைந்திருப்பதை வாசகர்கள் பாராட்டினர்.

கதாபாத்திரங்களில் கெட்டவர்களே இல்லாத ஒரு நாவல் எனப் பேராசிரியர் அ. மார்க்ஸ் அவர்கள் நேரில் சந்திக்கையில் பாராட்டினார். போட்டி நடுவர்களுள் ஒருவராக இருந்த எழுத்தாளர் ஜெயமோகன் அவர்கள் இந்நாவலைப் பற்றித் தன் இணையதளத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இலக்கியத்தில் எனக்கும் ஒரு சிறிய இடத்தை உருவாக்கித் தந்த நாவல் உடல் வடித்தான்.



உங்களது சிறுகதைகளில் பெரும்பாலும் தென் சென்னை பேச்சு வழக்கு உள்ளது. அதன் வீச்சை வாசகர்கள் மறுமொழியாக கேட்டிருக்கிறீர்களா?

நுட்பமான கேள்வி.

சென்னை வட்டார வழக்கென்பது பொதுவாகச் சென்னையின் அனைத்துப் பகுதியிலும் வழங்கப்படும் வட்டார வழக்கு கிடையாது. வடக்கே எண்ணூரில் வழங்கப்படும் சென்னைத் தமிழுக்கும், தெற்கே பட்டினப்பாக்கத்தில் வழங்கப்படும் சென்னைத் தமிழுக்கும் வேறுபாடு உண்டு. இஸ்த்துக்குனு (இழுத்துக்கொண்டு), வல்ச்சுக்குனு (இழுத்துக்கொண்டு), ஒரே பொருள்கொண்டவை என்றாலும் வடசென்னையில் (பிராட்வே) அது இஸ்துக்குனு என்றும், தென்சென்னையில் (அயோத்தியா குப்பம்) அது வல்ச்சுனு என்றும் ஒலிக்கப்படும்.

என்னுடைய கதைகளில் இடம்பெறும் மனிதர்கள் பெரும்பாலும் (‘போலி’ நாவல் தவிர்த்து) தென்சென்னையைச் சேர்ந்தவை என்பதால் அந்த உரையாடல்களில் தென்சென்னைப் பாணி இருக்கும். ‘இளைத்தவன்’ நாவலில் வடசென்னையில் பட்டாளத்தில் இருக்கும் உருது முஸ்லிம் கதாபாத்திரங்கள் அமைந்ததால், அவர்களுக்கு இடையே நாவலில் நடக்கும் உரையாடல்களை உருது கலந்த பேச்சு வழக்கில் எழுதினேன்.

என்னுடைய கதைகளை, நாவல்களைப் படித்த நண்பர்கள் அவற்றில் இருக்கும் உரையாடலில் புழங்கும் சென்னைத் தமிழ் தொடர்பாக என்னிடம் சில பின்னூட்டங்களை நேரில் சொன்னதுண்டு.

உங்களுக்கு முன்மாதிரியாக நீங்கள் நினைக்கும் எழுத்தாளர் யார்?

நண்பர், எழுத்தாளர் இரா. முருகன். ராயர் காப்பி கிளப் மடலாற் குழுமத்தில் இரா. முருகனிடமிருந்து சிறுகதை எழுதக் கற்றுக்கொண்டேன்.

இரா. முருகனின் ராமோஜியத்தைக் கால விவரிப்புக்கும் பா.ராகவனின் இறவானை கதையின் வேகத்தும் நான் அடிக்கடிப் படிப்பேன். அவ்விரண்டையும் வாசிப்பதை நான் நாவல் எழுதுவதற்கு முன்பு செய்யக்கூடிய பயிற்சியாகவும் நினைக்கிறேன். எழுத்தாளர் பா. ராகவன் நடத்தும் பயிற்சிப் பட்டறையில் ‘நாவல் எழுதும்’ பயிற்சி வகுப்பில் பயின்றிருக்கிறேன்.

முதியவர்களுக்கான உடற்பயிற்சியின் அவசியம்? போதிய விழிப்புணர்வு இருக்கிறதா?

விழிப்புணர்வு இருக்கிறது, ஆனால் உடற்பயிற்சி செய்வதில்லை.

நடந்தவன் கால்ல சீதேவி என எங்கள் பகுதியில் ஒரு பழமொழி உண்டு. நடந்தால் உடல் நலமாக இருக்கும் என்பது அனைவருக்கும் தெரிந்த ஒன்று. பொருட்செலவே இல்லாமல் கிடைக்கக்கூடிய அந்த எளிய உடற்பயிற்சியை எத்தனை பேர் செய்கிறோம்?

முதியவர்களுக்கான பயிற்சி அணுகுமுறை என்று வரும்போது, முதலில் அவர்கள் தங்கள் உடல்திறனைத் தெளிவாக அறிந்துகொண்ட பின்னர் எந்த உடற்பயிற்சியைச் செய்வது என ஆலோசித்து அதன்படி செய்யவேண்டும்.

எல்லாப் பயிற்சிகளும் உடல்திறன் தொடர்பானவையும் இணையவெளியில் இலவசமாகக் கிடைக்கின்றன என்பதால் மருத்துவரிடமோ, தொழில்முறை உடற்பயிற்சியாளரிடமோ ஆலோசனை கேட்காமல் முதியவர்கள் உடற்பயிற்சி செய்யக்கூடாது.

முதியவர்கள், குருதியழுத்தம் கூடாமலும், மூட்டுகளின் மீது அழுத்தம் உண்டாகாமலும் மெதுவாக நடப்பதற்கு மருத்துவரிடம் ஒரு வார்த்தை சொன்னாலும் போதும், ஆனால் உடற்பயிற்சிகள் எனும்போது ஆலோசனை கட்டாயம்.

அனைத்தும் நலம் என ஆரோக்கியமாக வாழும் முதியவர் தன்னுடைய ஆரோக்கியத்தைத் தக்கவைத்துக்கொள்ள எளிய உடற்பயிற்சிகள் மேற்கொள்ளலாம். நடை, யோகா, உடலை வளைக்கும் பயிற்சிகள், அதிக பளுவில்லாத எடையை அமர்ந்தபடியே கைகளால் உயர்த்தி தாழ்த்திச் செய்யும் பயிற்சி, முடிந்தால் எடையில்லாமல், நாற்காலியின் உயரத்துக்கு அமர்ந்து எழுகின்ற தோப்புக்கரணம், கைகளைச் சுற்றுவது, கால்களை நேரில் உயர்த்தித் தாழ்த்தி, பக்கவாட்டில் உயர்த்தித் தாழ்த்தி, பின்பக்கமாக வளைத்துப் பிடித்து, பத்மாசனம் அல்லது சம்மணமிட்டு அமர்வது போன்ற பயிற்சிகளைச் செய்யலாம்.

பணிசெய்த நாடுகள் மற்றும் அங்கு கற்றுக்கொண்ட முக்கியமான பழக்கங்கள்..?

முதல் பணி சென்னையில் தனியார் நிறுவனத்தில் தொடங்கியது. அதன் பின்னர் மின்சார வாரியத்தில் பணி. பெரும்பான்மையாகப் பணி என்றால் மக்கள் சென்னைக்குக் குடிபெயர்வார்கள், நான் மின்சார வாரியப் பணிக்காக மேட்டூருக்குக் குடிபெயர்ந்தேன். நாற்பத்தைந்து ஆண்டுகளுக்கு முந்தைய மேட்டூர் வாழ்க்கை எளிமையைக் கற்றுத்தந்தது.

வளைகுடாவுக்குச் சென்றதும் கற்றுக்கொண்ட முதல் பாடம், வேலையைச் செய் + பணம் சேமி. கடிகாரத்தைப் பார்த்துப் பழக்கப்பட்ட அரசுப் பணிக்கும், கடிகாரத்தைப் பார்க்கவே நேரமில்லாத வளைகுடாப் பணிக்கும் இடையே ஆறு வித்தியாசங்களுக்கும் மேல். உழைப்பைத் தவிர வேறெதையும் நினைக்க நேரமில்லாத அளவுக்குதான் அங்கு வேலை நேரம் இருந்தது. பணிமுடித்து வீட்டுக்கு வந்ததும் படுக்கையில் விழத்தான் உடலும் மனமும் கெஞ்சும். அன்றைய வளைகுடா அணுகுமுறை இப்போது சென்னையிலும் வந்துவிட்டதாக உணர்கிறேன். பணியழுத்தம் என்பது உலகளாவிய பிரச்சனையாகிவிட்டது. அன்று முதன் முதலாகப் பணியழுத்தத்தை உணர்ந்ததை இங்கு குறிப்பிடுகிறேன் என்ற அளவில் இதைக் கடந்துவிடுங்கள்.

வளைகுடா நாட்டினர் தங்கள் மொழியில் ஏற்றுக்கொண்ட தளர்வுகள் எனக்குப் பிடித்தன. எந்த அரபியும் ஒழுங்காக அரபி பேசாத நம்மை ஏளனம் செய்ததில்லை. நம்மிடம் வேலை வாங்குவதற்காக அவர்கள் ஆங்கிலம் கற்றுக்கொண்டனர் என்றும் சொல்லலாம்.

அரசு அலுவலகங்கள் தவிர்த்து மற்ற அனைத்துத் தொடர்பாடல்களிலும் அரபி மொழி பேசாமலே ஆண்டுக்கணக்கில் வளைகுடாவில் வாழமுடியும். துபாய் போன்று வெளிநாட்டவர் அதிகமான அளவில் குடியிருக்கும் நகரங்களில் இது சாத்தியப்படுவதை இங்கு குறிப்பிடவில்லை; தாயிஃப், ஹஃபூஃப் போன்று உள்நாட்டவர் அதிகமாக வாழும் சவூதி அரேபிய நகரங்களிலும் அரபி மொழித் தளர்வு உள்ளது.

வளைகுடாவில் பணியில் இருக்கையில் அரபிகளின் மொழித்தளர்வுக்குப் பின், ஜப்பானியர்களிடம் கற்றது செயல்முறைகளிலிருந்து இம்மியும் மாறாத தன்மை. கோடு போட்டாற் போலச் செல்வது அவர்களது வழக்கம். நேரந்தவறாமை அவர்களுக்கு இயல்பு.



எகிப்தியர்களின் நீளமான வாக்கிய அமைப்புகள் பிடிக்கும். வளைகுடா வாழ்க்கையின் கடைசி ஏழு ஆண்டுகள் எகிப்தியப் பொறியாளர்களுடன் கழிந்தது. உரையாடலை எவ்வளவு சுருக்கமாக முடிக்கலாம் என நாம் யோசிப்போம்; எவ்வளவு விளக்கமாக உரையாடலாம் என அவர்கள் யோசிப்பார்கள். உரையாடல் கலையில் சிலவற்றை அவர்களிடமிருந்து பெற்றேன்.

தேவைக்குக் கீழ்ப்படியும் குணத்தை பிலிப்பைனியர்களைப் போல் நமக்குக் கற்றுத்தர வேறு நாட்டவர்கள் கிடையாது. பதினான்கு ஆண்டுகள் பிலிப்பைன் நாட்டைச் சேர்ந்த பொறியாளர்களுடன் தொடர்பாடலில் இருந்தேன். தொழில் நுட்ப உரையாடல்களில் தங்கள் மேலாளரிடம் மாற்றுக்கருத்தை அதிமென்மையாக முன்வைப்பார்கள். குறிப்பிட்ட பணியை மட்டும் திறம்படச் செய்யும் தன்மை பிலிப்பைனியர்களிடம் உண்டு.

முன்னெல்லாம் ஊருக்கு ஒரு இஞ்சினியர் இருப்பாங்க, இப்ப எங்க பாத்தாலும் இஞ்சினியர் இருக்காங்க என்கிற எள்ளலை எவ்வாறு பார்க்கிறீர்கள்?

முன்பெல்லாம் ஊருக்கு ஒரு பெரிய மனிதர் இருப்பார், இப்போது அப்படியா? என்னும் எதிர்க்கேள்வியுடன் இதற்கான பதிலைத் தொடங்கலாம்.

நல்ல பொறியாளர்களின் தேவை எப்போதும் இருக்கிறது. கட்டிடங்களின் எண்ணிக்கையைப் பாருங்கள், கட்டிடக்கலைஞர்களின் வேலை வாய்ப்பை அதனுடன் தொடர்புபடுத்துங்கள். தெருவில் நீங்கள் பார்க்கும் இருசக்கர நான்கு சக்கர வாகனங்களின் எண்ணிக்கையைப் பாருங்கள், அது தொடர்பான பொறியாளர்களுக்கு இருக்கும் வேலை வாய்ப்பை அதனுடன் இணைத்துக் கணக்கிடுங்கள். போலவே, மென்பொருள், தொலைதொடர்பு, தொலைக்காட்சி என ஒவ்வொரு துறையிலும் பொறியாளர்களின் தேவை இருக்கிறது, அதற்காகப் படித்து அந்தந்தத் துறையில் செயல்பட பொறியாளர்கள் முயற்சி செய்கிறார்கள்.

இயல்பாக நடக்கும் இதில் எள்ளி நகையாட ஏதும் இல்லை.

அவர்கள் திறமையான பொறியாளர்களா? இல்லையா? வேலைபெறுந்திறன் (எம்ப்ளாயபிலிட்டி) அவர்களிடம் உள்ளதா? என்னும் நிர்வாகவியல் பாணிக் குறுக்குக்கேள்விச் சரடுகளைப் பிடித்துக்கொண்டு மணிக்கணக்கில் விவாதம் செய்யலாம். அது தேவையற்றது.

சந்தையில் வேலை வாய்ப்புக்காகப் பொறியியலின் பக்கம் மாணவர்கள் சாய்கின்றனர் என்ற அளவில் இந்தக் கேள்வியைக் கடப்பது நல்லது.

கல்வியின் முக்கியத்துவம் பற்றி?

கல்விதான் நம்மை உயர்த்தும் என்பதில் மாற்றுக்கருத்து யாருக்கேனும் இருக்குமா?

தற்காலத்தில் சமோசா விற்பனையைச் சுட்டிக்காட்டி சமோசா விற்பவர்கள் கல்வி கற்றவர்களைவிடவும் அதிகமாக சம்பாதிக்கின்றனர் என நிறுவிக் கல்வியைக் கேள்விகேட்கும் விழியங்கள் சிலவற்றைப் பார்க்க முடிகிறது. கல்வியைப் பொருளீட்டுவதுடன் மட்டுமே தொடர்புபடுத்திப் பார்க்கும் அணுகுமுறை இருக்கும் வரையில் இப்படியான சமோசாவுக்கும் கல்விக்குமான ஒப்பீடுகள் இருக்கும். வணிகம் தவறல்ல, சிறுவியாபாரம் தவறல்ல, ஆனால் எப்போதும் அதைக் கல்வியுடன் தொடர்புபடுத்திக் கேள்வி கேட்பது தவறு.

பட்டயப் படிப்பை முடித்துவிட்டு இயந்திரவியலில் வேலைக்குச் சேரும் கதாநாயகன் ஒருகட்டத்தில் இயந்திரவியல் பட்டதாரியாக ஆகாமல் பதவி உயர்வு கிடைக்காது என்னும் களநிலவரத்தை உணர்ந்த பின்னர், மாலை நேரக் கல்வியில் தன் பட்டப்படிப்பைத் தொடர்வதைக் கதைக்கருவாகக் கொண்டு ‘மின்தூக்கி’ என்னும் நாவலை எழுதினேன். கல்வியின் அவசியத்தைப் பேசும் நாவல் அது.

கல்வி முக்கியமானது.

சாட்ஜிபிடி போன்ற ஏஐ காலம் இப்போது. இது எழுதும் கலையைப் பாதிக்குமா!?

இப்போதைக்கு எழுதும் கலையைப் பாதிக்காது. ஆனால் அதிகமான எழுத்துகள் சந்தைக்கு வரும். ஏஐ மூலமாக எதையெனும் எழுதி அல்லது மொழிமாற்றி எடுத்துக்கொண்டாலும் அதைப் பதிப்பிக்கும் முன்னர் எழுத்தாளர் திருத்தம் செய்து சிறப்பாக்கி வெளியிடவெண்டுமென்றால், அவர் எழுதும் கலை அறிந்தவராகத்தான் இருக்கவேண்டும். ஏஐ தருகின்ற மொழி நடையைப் படித்து அதன் வாக்கிய அமைப்புகளில் திருத்தம் செய்யத் தெரிந்த ஆசிரியராகவும் அந்த எழுத்தாளர் இருக்கவேண்டும்.

எழுத்தாளர்களின் பாணியையும் மொழிநடையையும் அதுவாகப் படித்து அறிந்து நகலெடுத்து அடிபிறழாமல் கதை எழுதும் அளவுக்கு ஏஐ வளர்ந்த பின்னர், அது எழுதும் கலையைப் பாதிக்கும். அந்தக் காலகட்டத்தில் குறைந்தபட்சம் ஏஐயினை ஏவுவதற்குத் (ப்ராம்ப்ட்) தரும் விவரங்களையாவது சரியாக எழுதும் திறனும் கற்பனையும் ஏஐயினைப் பயன்படுத்தப்போகும் எழுத்தாளருக்கு வேண்டும்.

சவூதி, துபாய் வளைகுடா வாழ்வை ஒட்டுமொத்தமாக துண்டித்து விட்டு சென்னைவாசியாக மாறியதை எவ்வாறு உணர்கிறீர்கள்?

அது இரண்டு ஆண்டுகளாகத் திட்டமிட்ட நகர்வு என்பதால் மனச்சாய்வின் அடிப்படையில் ஏக்கங்கள் கிடையாது. ஆனால், திட்டத்தில் எதிர்பாராதவிதமாக கொரோனாக்காலம் இடையில் நுழைந்ததால், ஒரு கட்டத்தில் தவறான முடிவினை எடுத்ததாகவும் உணர்ந்தேன். கொரோனா இடர்கள் தவிர்த்து வேறு எந்த இடர்பாட்டையும் உணரவில்லை.

வளைகுடாவிலிருந்து சென்னைக்குத் திரும்பும் திட்டத்தை இந்தக் கடைசி முயற்சிக்கு முன்பும் இரண்டு முறைகள் முயன்று, தோற்று, மீண்டும் வளைகுடாவுக்குப் புறப்பட்டதால் உணர்வின் அடிப்படையில் எந்தப் பாதிப்பும் கிடையாது. இது இப்படித்தான் இருக்கும் என்பது முன்பே தெரிந்துவிட்டால் அங்கு திகைப்புக்கு வாய்ப்பில்லை.

மூளைக்குச் சிறிது ஓய்வுகொடுத்துவிட்டு மனச்சாய்வின் அடிப்படையில் மட்டும் இந்தக் குடியிருப்பு மாற்றத்தை அணுகினால், நான் துபாய் மாநகரின் பக்கம் சாய்ந்தவனாகவும், என் மனைவியும் குழந்தைகளும் ஜித்தா மாநகரின் பக்கம் சாய்ந்தவர்களாகவும் இருக்கிறோம்.

துபாயின் உள்கட்டமைப்பும், சாலை விதிகளும், நீக்கமற நிறைந்த பொழுதுபோக்கு அம்சங்களும் எனக்குப்



எண்ணற்ற விண்ணுயர் கட்டிடங்கள் உள்ள நகரமாதலால் என் தொழிலான மின்தூக்கி வடிவமைப்பில் நிறையக் கற்றுக்கொள்வதற்கு துபாய் வாய்ப்பளித்தது, அதனால் துபாயை எனக்குப் பிடிக்கும்.

ஜித்தாவில் குடும்பத்தினருடன் நான் வாழ்ந்த காலகட்டத்தில் அங்கு திரையரங்கங்களும் பொது நிகழ்ச்சிகளும் கிடையாது. அலுவலகம், அலுவலகம் முடிந்தால் வீடு, மாலையில் கண்டிப்பாக்க் குடும்பத்தினரை வெளியில் அழைத்துச் செல்வது, தமிழ்ச் சங்கம், கல்விச் சேவைகள் என அனைத்தும் சுற்றிச்சுற்றி நட்பும் சுற்றமும் சூழ்ந்ததாகவே அமைந்து வேலை நேரம் தவிர்த்த மற்ற நேரம் முழுக்கக் குடும்பத்துடன் இருக்கும் வாய்ப்பு இருந்ததாலும், குழந்தையின் பள்ளிப்பருவம் ஜித்தாவில் தொடங்கியதாலும், அந்தச் சூழல் என் மனைவிக்கும் குழந்தைகளுக்கும் பிடிக்கும்.

இவ்விரண்டு மனச்சாய்வுகள் தவிர்த்து வேறெதுவும் பெரிதாக ஏக்கங்கள் இல்லை.

வளைகுடா – சென்னை இடமாற்றம் தொடர்பாக மக்கள் சொல்லத் தயங்கும் முக்கியமான விஷயத்தைச் சொல்லியே ஆகவேண்டும். வளைகுடாவில் இருக்கையில் நமக்குச் சுற்றத்தில் இருக்கும் மதிப்பு வளைகுடாவை விட்டுத் திரும்பிய பின்னர் இருப்பதில்லை. நமது வளைகுடா வருமானத்தை விடவும் அதிகமாகச் சென்னையிலேயே பொருளீட்டும் சுற்றமாக இருப்பினும், அந்தச் சுற்றமும் நாம் வளைகுடாவில் இருப்பவரென்றால் தனி மதிப்பு தரும். இன்னும் பலருடைய பார்வையில் வளைகுடா வாழ்க்கையென்றால் பெரும்பணக்காரர்கள் என்னும் நினைப்பு இருக்கிறது.

எழுத்து, இலக்கியம் தாண்டி முதலீடு, சேமிப்பு குறித்த உங்கள் நிபுணத்துவம் எப்போது ஆரம்பித்தது?

நிபுணத்துவம் என்னும் வார்த்தையைத் தயைகூர்ந்து தவிர்த்துக்கொள்ளுங்கள். முதலீட்டில் நான் நிபுணத்துவம் பெற்றவன் அல்லன்.

வளைகுடாவிலிருந்து சென்னைக்குத் திரும்பிய முதல் முயற்சியின்போது முதலீடு தொடர்பான விழிப்புணர்வு கிடைத்தது. ஆண்டு இரண்டாயிரத்து ஏழில் இது நடந்தது. ஈநாடு, வரவேற்பு என நீங்கள் பார்த்திருக்கக்கூடிய மலையாளத் திரைப்படங்களில் நாட்டுக்குத் திரும்பும் வளைகுடாவாசிக்கு என்ன நடக்கிறதோ, சரியாகத் திட்டமிடாமல் நாட்டுக்குத் திரும்பியோருக்கு என்ன நடக்கிறதோ, அது எனக்கும் நடந்தது. தொடங்கிய தொழிலில் வெற்றிபெற முடியாமல், சேமிப்பாக இருந்தவை கரைய, சில மாதங்களில் எதிர்காலம் கேள்விக்குறியாகி, தீயணைப்பு முயற்சியாக மீண்டும் வளைகுடாவுக்கு வேலைக்குச் சென்ற அனுபவம், அதன் பிறகு யோசித்து முதலீடு செய்யவேண்டிய அவசியத்தை உணர்த்தியது.

முதலில் சேமிப்பது, குறிப்பிட்ட அளவு அந்தச் சேமிப்பு வளர்ந்ததும் அதனை எடுத்துக் குறைந்த இழப்பு உண்டாக வாய்ப்பிருக்கும் முதலீடுகளுக்கு மாற்றுவது, அதில் ஓரளவு பணம் சேர்ந்த பின் அதிலிருந்து அதிக இழப்பு உண்டாக வாய்ப்பிருக்கும் முதலீடுகளுக்கு மாற்றுவது, அனைத்தையும் தேவைக்கேற்ப சமன் செய்துகொண்டே முதலீடுகளைத் தொடரும் அணுகுமுறை இன்றைக்கு அனைவரும் அறிந்தது.

இந்த அணுகுமுறையைக் கற்றுத் தர அன்று ஆசிரியர்கள் இல்லை. வங்கிச் சேமிப்புதான் முதலீடென்றும், சென்னைக்கு அருகில் திண்டுக்கல்லில் காணி நிலம் வாங்குவதுதான் முதலீடென்றும், செய்கூலி சேதார விலைக்கூட்டல்களுடன் நகை வாங்குவதுதான் சேமிப்பென்றும் அறியப்பட்ட காலகட்டத்தில் வளைகுடாவில் வாழ்ந்து பழக்கப்பட்டவர் நாங்கள்.

பங்குச்சந்தையைக் கற்றுத்தரவும் ஆள்கள் இல்லை. ‘டிமேட்’ கணக்கென்ற ஒன்றே வழக்கத்தில் இல்லாத காலகட்டத்தில் எங்காவது அறிந்தவர் தெரிந்தவர்களிடம் பங்கு விண்ணப்பப்படிவம் வாங்கி வரைவோலை எடுத்துப் பதிவு அஞ்சலில் அனுப்பி, பங்கு ஒதுக்கப்பட்ட விவரத்தையும் பதிவு அஞ்சலில் அவர்களிடமிருந்து பெறக் காத்திருந்து, நுரை தள்ளிய காலகட்டத்தைக் கடந்திருக்கிறோம்.



டிமேட் உண்டான பின் அனைத்தும் அனைத்தும் சொடுக்கில் நடக்கின்றன.
மீண்டும் கேள்விக்கு வருவோம். நிபுணத்துவம் அடையவில்லை, கற்றுக்கொண்ட பாடங்கள் சேமிப்புக்கும் முதலீட்டுக்கும் உள்ள வேறுபாட்டைக் கற்றுக்கொடுத்தன. முதலீட்டில் அடைந்த இலாப நஷ்டங்கள் முதலீட்டைப் பிரித்து வைக்க வேண்டிய கட்டாயத்தைக் கற்றுத் தந்தன. இன்றைக்கு மிகவும் எளிதாக இளைஞர்கள் செய்யக்கூடிய குறுகிய இலாபம் - நீண்ட காலத் திட்டம் என முதலீட்டை இரண்டாகப் பிரிக்கும் அணுகுமுறையைக் கடினமான பாதையில் சென்று நாங்கள் கற்றுக்கொண்டோம்.

30+ ஆண்டுகால வளைகுடா வாழ்க்கையில் 15+ ஆண்டுகளாகத்தான் இந்த விழிப்புணர்வு என்னிடம் உள்ளது.

இன்றைய வளைகுடாவாசிகளுக்கான உங்கள் அறிவுரை என்ன?

இன்றைய வளைகுடாவாசிகள் அனைவரும் சேமிப்பிலும் முதலீட்டிலும் கெட்டிக்காரர்கள். அளவில்லாத ரீல்ஸ்களும், யூட்யூப் சானல்களும், புத்தகங்களும், இணைய வகுப்புகளும் முதலீடு தொடர்பாகக் கற்றுத் தருகின்றன. அவர்களுக்கு அறிவுரை எனத் தனியாக எதுவும் தேவையில்லை. ஆனால், அனுபவப் பகிர்வு என வேண்டுமானால் சிலவற்றைச் சொல்கிறேன்.

- உங்களுடைய சம்பளத்தை யாரிடமும் சொல்லத் தேவையில்லை.
-
- வளைகுடாவில் முதல் சம்பளம் பெற்ற நொடியிலிருந்து உங்கள் சேமிப்பு தொடங்கவேண்டும்.
- உங்கள் ‘வெளிநாடு வாழ் இந்தியர் வங்கிக் கணக்கு’ உங்கள் கட்டுப்பாட்டில் மட்டுமே இருக்கவேண்டும்.
- நிலச்சொத்துகள் அனைத்தும் உங்கள் பெயரில் மட்டும் பதிவு செய்யப்படவேண்டும். சொத்துகளின் பத்திரங்கள் உங்கள் கட்டுப்பாட்டில்தான் இருக்கவேண்டும்.
- உங்கள் சேமிப்பு, முதலீடு, வங்கியிருப்பு அனைத்தையும் எழுதிவைத்தோ, எக்செல் ஷீட்டில் இட்டோ யாருக்கும் தெரியாமல் பாதுகாத்து வைப்பதும், குறிப்பிட்ட இடைவெளியில் அதை இற்றைப்படுத்தி வைப்பதும் முக்கியம்.
- பிரித்து முதலீடு செய்வது நல்லது. அசெட் அலக்கேஷன் என்பார்கள். வைப்பு நிதி, பரஸ்பர நிதி, பங்குச்சந்தை, தங்கம், டிஜிட்டல் தங்கம், நிலச்சொத்துகள், நிறுவனப் பத்திரங்கள் எனத் தேவைக்கேற்பப் பிரித்து முதலீடு செய்யவேண்டும்.
-
- அனுபவம் உள்ள நல்லவர்களிடம் முதலீட்டு ஆலோசனை பெறவேண்டும்.
-
- திருக்குறள்தான், சொன்னால் தேய்வழக்கென இளைஞர்கள் ஒதுக்குவார்கள். ஆனால், எல்லா அறிவுரைகளும் சுற்றிச்சிற்றி அங்குதான் வந்து நிற்கும்.

ஆகாறு அளவிட்டி தாயினுங் கேடில்லை
போகாறு அகலாக் கடை
- குறள்: 478

பொருள்:

பொருள் வரும் வழி (வருவாய்) சிறிதாக இருந்தாலும், போகும் வழி (செலவு) விரிவுபடாவிட்டால் அதனால் தீங்கு இல்லை.

— மு. வரதராசன்

வளைகுடாவிலிருந்து சென்னைக்கு வந்து எழுத்தை முதன்மையாகக் கொண்ட பின் திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தில் இளங்கலை - தமிழ் இலக்கியம் படித்தீர்கள், பின்னர், முதுகலை – தமிழ் எனப் படிப்பைத் தொடர்கிறீர்கள். தமிழ் பயில்வதற்கான காரணம் என்ன?

தமிழின் மீது இருக்கும் ஆர்வத்தால் தமிழ் பயில்கிறேன்.

இலக்கியத்தையும் இலக்கணத்தையும் அறிந்துகொள்ள இணையப்பெருவெளியில் வாய்ப்புகள் இருந்தும் அவற்றைப் பாடத்திட்டங்கள் வாயிலாக ஒரு மாணவனைப் போலப் பயின்று தேர்வெழுதினால் என்னவெனத் தோன்றியது, மூன்றாண்டுகள் தொலைவழிக் கல்வியாக இளங்கலை – தமிழிலக்கியத்தில் சேர்ந்தேன். முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்ற ஆர்வத்தில் முதுகலை – தமிழ் பயிலச் சேர்ந்து கல்வியைத் தொடர்கிறேன். அதில் முதலாம் ஆண்டுத் தேர்வை எழுதிவிட்டு முடிவுகளுக்குக் காத்திருக்கிறேன்.

தொல்காப்பியத்தின் எழுத்து, சொல், பொருள் மூன்று அதிகாரங்களின் சில பகுதிகளையும், நன்னூலின் சில பகுதிகளையும், யாப்பருங்கலக் காரிகை, தண்டியலங்காரம், இவற்றின் பகுதிகளையும், சங்க இலக்கியத்தையும், இடைக்கால இலக்கியத்தையும், இக்கால இலக்கியத்தையும் பாடத்திட்டத்தின் வழியாகப் படித்துத் தேர்வெழுதி மதிப்பெண் பெறுவது சுறுசுறுப்பாக இயங்கச் செய்தது.

கணினியில் தமிழில் 30000+ வார்த்தைகளில் நாவல் எழுதிப் பழகிய பின், தேர்வுக்கூடத்தில் வினாக்களுக்கு 300 வார்த்தைகளில் விளக்கம் எழுதுவதும், 1000 வார்த்தைகளில் கட்டுரை வரைவதும் முதலாம் ஆண்டுத் தேர்வில் இயலாததாகத் தோன்றின. பின்னர் அடுத்தடுத்த ஆண்டுகளில் மூன்று மணி நேரத்தில் விடைத்தாளில் 20+ பக்கங்கள் தமிழில் எழுதுவது பழக்கப்பட்டது. மேற்சொன்னதுபோல் இந்தக் கல்வி என்னைச் சுறுசுறுப்பாக்குகிறது.

நன்றி.

பகிர்வு

புனிதா பார்த்திபன்

"என்னாச்சு ஈஸ்வரி, ரெண்டு மூணு நாளா நானும் பாக்குறேன், சிடுசிடுனே இருக்க. யார்ட்டையும் ஒழுங்கா பேச மாட்ற, என்ன உன் மகன் அவன் பொண்டாட்டி பேர டாட்டூ போட்டுட்டு வந்துருக்கான்னு இப்படி பண்றியா?" எனக் கேட்டார் கணபதி.

"ம்... என்னதான் தூக்கி வளர்த்து ஆளாக்குனாலும், நேத்து வந்தவளுக்காக தான இந்தப் பசங்க மாறிடுறாங்க" என்ற ஈஸ்வரியை புருவத்தை உயர்த்திப் பார்த்த கணபதி,

"நான் என்னமோ பேச்சுக்கு கேட்டா, நீ அதான் பிரச்சனைங்குற! இதென்ன புது எண்ணம் ஈஸ்வரி? அன்புங்குறது காத்து மாதிரி எல்லா திசைகள்லையும் இருக்கணும். தன் மேல மட்டுமே அன்பா இருக்கணும்னு இங்க யாராலையும், எந்த உறவுக்குள்ளையும் நினைக்க முடியாதுல" என்றார்.

"ம்... சரிதாங்க... ஆனா அப்ப அந்த அன்போட வெளிப்பாடு என் மேலயும் தான இருக்கணும். என்னதான் சொல்லுங்க, இனி நான் ரெண்டாம் பட்சம் தான. புதுசா ஒரு உறவு வந்ததும் நான் தள்ளிப் போயிடணும்ங்குறதுதான நியதி"

"ஈஸ்வரி, மொதல்ல ஒன்ன புரிஞ்சுக்கோ. 'உன் மேல, நான் ரொம்ப அன்பா இருக்கேன்னு' வெளிப்படுத்துறதுதான் இந்த மாதிரி டாட்டூ போடுறதெல்லாம். ஆனா ஒரு தாய்க்கும், மகனுக்கும் இருக்குற உறவு அப்படி சொல்லிக்காமிக்கக் கூடியதா? இது உள்ளங்கையோட இணைஞ்ச ரேகை மாதிரி! நிலாவும் அழகும் மாதிரி. இது வேற எந்த உறவோடையும் ஒப்பிட முடியாதது. மருமக வந்ததும் மகன்ட்ட இருந்து நீ ஏன் தள்ளிப் போறதா நினைக்குற, அவளுக்கும் போதுமான இடம் குடுக்குறதா நினச்சுக்கோயேன்."

"நான் சரியாதாங்க இருக்கேன். முக்கியமா அப்படியே தான் இருக்கேன்" என்றார் ஈஸ்வரி லேசான சிடுசிடுப்புடனே.

"சரி, ஒன்னே ஒன்னுக்கு மட்டும் உன் மனசக் தொட்டு பதில் சொல்லு. கடைசி வரைக்கும் அவன் எல்லா பாசத்தையும் உன் மேல மட்டுமே காட்டணும்னு நினைக்கிறியா? அஞ்சு விரலுமே கைக்கு முக்கியமில்லையா?" எனக் கேட்டார்.

சில நொடிகள் மௌனத்திற்கு பிறகு, மெதுவாய் தலையை ஆட்டிய ஈஸ்வரி, "புரியுதுங்க" என்றார் சுரத்தையின்றி.

"ஈஸ்வரி, இந்த வயசுல கூட நான் ஒரு புடவை எடுத்துக் குடுத்தா நீ எவ்வளவு சந்தோசப்படுற, அதே தான அந்தப் பொண்ணுக்கும். எப்பவுமே ஒரு விஷயத்த நினைவுல வச்சுக்கோ. தலை, கை ரெண்டுமே உடம்புல முக்கியம்தான். அதுக்காக கிரீடத்த எடுத்து கையில மாட்டிக்க முடியாது. அந்த மாதிரி ஒவ்வொரு உறவுக்கும் அதுக்கான அன்பு, ஒவ்வொரு பாணியில வெளிப்படுத்தக் கூடியதா இருக்கும். அத மனசார ஏத்துக்கப் பழகிக்கோ" என்றவர் நகர்ந்து சென்றார்.

மௌனமாய் கணவரின் வார்த்தைகளை தனக்குள்ளே சொல்லிப் பார்த்து, தனக்குத் தானே தலையாட்டிக் கொண்ட ஈஸ்வரியின் மனதுக்குள் கனத்த ஏதோ ஒன்று மெல்ல வடிய ஆரம்பித்திருந்தது..

செஞ்சோற்றுக் கடன் தீர

மாலா மாதவன்
சென்னை

“மடந்தை பொன் - திரு மேகலை மணி உகவே மாசு
அறத் திகழும் ஏகாந்த
இடம்தனில் புரிந்தே நான் அயர்ந்து இருப்ப, "எடுக்கவோ? கோக்கவோ?'" என்றான்;
திடம் படுத்திடு வேல் இராசராசனுக்குச் செருமுனைச் சென்று, செஞ்சோற்றுக்
கடன் கழிப்பதுவே, எனக்கு இனிப் புகழும், கருமமும், தருமமும்!'

மணிகண்டன் வாய் வில்லி பாரதப் பாடலை முணுமுணுத்தது.

திருவில்லிக்கேணியின் ஒண்டுக் குடித்தன மொட்டை மாடியில் பாய் போட்டு மல்லாக்க படுத்துக் கொண்டு வானம் பார்த்துக் கொண்டிருந்தான் அவன்.

வைகாசி பௌர்ணமி வானில் மின்ன அதன் ஒளியில் அதன் அருகில் படர்ந்திருக்கும் சேடிப் பெண்களான நட்சத்திரங்களின் மினுக்கொளி சற்று குறைந்து தான் இருந்தது.

‘என் வானில் பௌர்ணமியானவள் தான் அவள். எத்தனை பெண்கள் நின்றாலும் அவள் முன் ஒளி குறைந்து தான் தெரிவர். ஆனாலும் அவளை என் மனைவியாக்க மனதுக்குத் தோன்ற வில்லை. சினேகிதியாய், சினேகிதிக்கும் மேலே நல்ல தோழமையாய்த் தான் அவளைப் பார்த்தேன்.’

மணிகண்டன் வான் நிலாவைப் பார்த்துக் கொண்டே தன் சிந்தனையைப் படர விட்டுக் கொண்டிருந்தான்.

“வாழ்க்கை வழியிலா? ஒரு மங்கையின் ஒளியிலா?
வாழ்க்கை வழியிலா? ஒரு மங்கையின் ஒளியிலா?
ஊரிலா? நாட்டிலா? ஆனந்தம் வீட்டிலா?
அவள் நெஞ்சின் ஏட்டிலா?
வான் நிலா நிலா அல்ல உன் வாலிபம் நிலா”

“என்னடா மணிகண்டா.. இப்ப தான் வில்லிபாரதம் பாடின! அது மனசுல போய் உட்காரதுக்குள்ள பட்டினப் பிரவேசம் ஆகிட்டியேடா. புரியலயா? இந்த வான் நிலா வந்த சினிமா பேரு சொன்னேன். என்ன ஒரே கச்சேரியா இருக்கு. மொட்டை மாடிக் கச்சேரி கூட சமீபத்துல ரொம்ப பிரபலமாச்சு தெரியுமோ?”

சக குடித்தனக்காரன் ரகுபதி வாயைப் பிடுங்கினான்.

“ம்ச்ச்!” என்றான் மணிகண்டன்.

“ஒரு நிலையான வேலை கிடைக்கற வரை இப்படி அலுப்பும் சலிப்புமாத் தான் இருக்கும் வாழ்க்கை. திடீர்னு காவியமாத் தோணும். திடீர்னு கவிபாடத் தோணும். நிலாவைப் பார்த்தா கவிதை கொட்டுமே. எல்லாம் வேலையில்லாத் திண்டாட்டத்தின் வெளிப்பாடுடா மணிகண்டா. போர்வையை இழுத்துப் போர்த்திட்டு தூங்கு.” தொணதொணத்தான் ரகுபதி.

படக்கென்று போர்வையை இழுத்ததில் போர்வையின் பொத்தல்களே ஆயிரம் நட்சத்திரங்களாய் வறுமையின் கதை பேசியது.

இந்த பொத்தல்களை அடைக்கத் தான் எப்படியாவது ஒரு வேலைக்குப் போகணும். கண்களை மூடிக் கொண்டான்.

“மணிகண்டா! உனக்கு வேணா நான் சினேகிதியா இருக்கலாம். ஆனா எனக்கு உன்னை விட்டுப் போகவே தோணலடா. அதுக்குன்னு உன்னைக் கணவனாவும் நினைக்கத் தோணல.லைஃப் லாங் உன் ப்ரெண்ட்ஷிப் வேணும்ன்னு தான் தோணுது. அத்தனை நல்லவன் நீ!” பானுமதி அன்று சொன்ன வார்த்தை அவனுள் ஒலித்தது.

“பானு! நீ பெண்ணாப் போயிட்ட. ஆணுக்கும் ஆணுக்குமான நட்பே காலச் சூழலில் காணாமல் போகுது. ஆண் , பெண் நட்பு எப்படி நிக்கும். அதுவும் காலத்துக்கும். சான்ஸே இல்ல!”

“இல்லடா மணிகண்டா. உனக்கொரு நல்ல மனைவியும் எனக்கொரு நல்ல கணவனும் கிடைத்தால் நம் நட்பும் இப்படியே தான் இருக்கும்!”

“புரியாமல் பேசாத பானு. எந்த ஒரு ஆணுக்கும் தன் வாழ்வில் இன்னொரு ஆணை மனைவியின் முக்கியமான நண்பன் எனக் கைகாட்டும் போது சந்தேகம் தான் தோணும்.”

“ஆனா வில்லிபாரதத்துல துரியோதனன் சந்தேகப் படலையாம்டா. துரியோதனன் மனைவிக்கும் என் பெயர் தான். பானுமதி! அவளும் துரியோதனின் நண்பன் கர்ணனும் சொக்கட்டான் விளையாடிக் கொண்டிருக்க அங்கு வந்த தன் கணவன் துரியோதனனைப் பார்த்துச் சட்டென்று மரியாதை நிமித்தம் எழுந்த பானுமதியின் இடை மேகலையைப் பிடித்து இழுத்தான் கர்ணன். அவனுக்கென்ன நினைப்பு என்றால் எங்கே பானுமதி ஆட்டத்தை இடையில் கலைக்கிறாளோ என்று அவன் அவளின் இடை மேகலையைக் கலைக்க அதில் இருந்து விழுந்த முத்துக்களைக் குனிந்து எடுத்த துரியோதனன் எடுக்கவோ கோர்க்கவோ என்றானாம். அப்படின்னா.. நீங்க விளையாட்டைத் தொடர்ந்து விளையாடுங்க. நான் இந்த மேகலையைக் கோத்துத் தரேன்னு அர்த்தமாம். அத்தனை நம்பிக்கை நம் மீதும் எனக்கு வரப் போற கணவருக்கு இருந்தால்..”

“ஆமா.. பெரிய பானுமதி.. இவ வீட்டுக்காரர் தான் துரியோதனன்! நான் தான் கர்ணன்! போவியா! இல்லாத காட்டுக்கு வழி சொல்லிட்டு வந்தா இருக்கற நட்பும் காணாமப் போயிடும் பானு. இப்ப என்ன.. தெனமும் பார்க்காட்டாலும் பேசாட்டாலும் என்னிக்காவது பார்த்தா பேசாமயா போகப் போறோம்! நல்ல மாப்பிள்ளையா வீட்டில் பார்த்தா தலையை ஆட்டி லைஃப்ல செட்டிலாகப் பாரு.”

மணிகண்டன் அந்தப் பேச்சு அங்கு முடிந்து விட்டதென என்று தான் நினைத்தான்.

இன்று காலை தன்னைச் சந்திக்க விரும்புவதாகக் கூறி ஆர்வி சொல்யூஷன்ஸ் முதலாளி ராஜவேல் அழைக்கும் வரைக்கும்.

“ஆர்.வி. சொல்யூஷன்ஸ்ல இருந்து உனக்குப் போன் வந்துருக்குடா! உன்னை நாளைக்கு காலைல பத்துமணிக்கு அவங்க ஆபீஸுல இருக்கச் சொன்னாங்க.”

அம்மா சொன்ன போது கூட அவன் அலட்சியமாகச் சொன்னான்.

“பாரும்மா! ஐயாவோட மகிமையைப் பாரு! என் திறமையைப் பார்த்து நான் அப்ளை பண்ணாத கம்பெனில இருந்து கூட எனக்கு இண்டர்வியூ கால் வருது.!” காலரைத் தூக்கி விட்டுக் கொண்டான்.
காலர் தூக்கி விட்ட போது தெரியலையே காணாமல் அடிக்கப் போறான்னு.

மணிகண்டன் துக்கம் தாளாமல் குப்புறப் படுத்துக் கொண்டான்.

“வில்லிபாரதப் பாட்டெல்லாம் நடப்புக்கு உதவாதுடா ரகுபதி!” மனம் தாளாது வார்த்தைகளை உதிர்த்தான்.

உதிர்த்த வார்த்தைகளைக் கோக்கத் தான் ரகுபதி காத்திருந்தானே.

“என்னடா ஆச்சு மணிகண்டா? காலைல இண்டர்வியூ அதுவும் ஆர் வி சொல்யூஷன்க்கு போயிருக்கன்னு உங்க அம்மா சொன்னாங்க. என்னாச்சு ஊத்திக்கிச்சா? அதான் புலம்புறியா?”

“ஊத்திக்கிச்சு.. ஆனா ஊத்திக்கலை!” என்றவாறு திரும்பிப் படுத்தான் மணிகண்டன். இப்போது போர்வை பொத்தல்களும் வானின் நட்சத்திரங்களும் நேருக்கு நேர் கண்சிமிட்டின.

“ஏண்டா?”

“துபாய்ல உள்ள அவங்க கம்பெனிக்கு என்னை அனுப்பறேங்கறாங்க!”

“டேய்.. செம சான்ஸ்டா மணிகண்டா. விடாத. அதுக்கா உம்முன்னு வானத்தப் பார்க்கற?”

“ஆறு வருஷ ஒப்பந்தத்துல போகணுமாம்.”

“என்னது?”

“ஆமா. இங்க எப்படி அம்மாவை விட்டுட்டு போறதுன்னு குழப்பம். அதான்.”

“அதான் நாங்க இருக்கோமே. பார்த்துக்கறோம். நீ நல்ல வேலையை விடாதடா மணிகண்டா. உன் வறுமைக்குத் தேவையான பணத்துக்கு ஒருத்தன் பாதை அமைச்சுக் கொடுக்கும் போது.. இதோ கொஞ்சம் முன்னாடி சொன்னியே வில்லிபாரதம் மாதிரி நடப்பு இல்லன்னு! இருக்குடா! கர்ணனின் ஏழ்மையைப் போக்கின துரியோதனனுக்கு கர்ணன் கடைசிவரை விசுவாசமா இருந்தான். நீயும் உன் வறுமையைப் போக்கச் சந்தர்ப்பம் கொடுக்கற ஆர் வி சொல்யூஷன்ஸ் முதலாளியை உன் துரியோதனனாத் தான் நினைக்கணும்.” ரகுபதி எடுத்துக் கூறினான்.

“ஆமாம்.. உண்மை தான். இவன் நவீன துரியோதனன்! எடுத்து வேறிடத்தில் கோர்க்கிறான்!”

சொன்ன மணிகண்டனின் இடப்பக்கம் கிடந்தது ஆர்.வி. சொல்யூஷன்ஸ் முதலாளி ராஜவேலுடன் தன் தோழி பானுமதிக்கு நடக்கப் போகும் திருமணத்திற்கான பத்திரிக்கை. அது நடப்பதற்கான விலை ஆறு வருஷ ஒப்பந்தத்துடனான இவனின் துபாய் பயணம்!

அந்த மாலை - பகுதி : 3/4

நான் உங்க கிட்ட அப்படியா பழகினேன்?

ஸ்ரீராம்

காலியாய் இருந்த இருக்கையில் அமர்ந்த வினோத் அப்பாவைப் பார்த்துச் சிரித்தான். பாலாஜியிடம் மரியாதையாய் கைகொடுத்தான்.

"என்னப்பா சொல்றா வினோ?"

"சாயங்காலம் நாம பேசிட்டு வந்த இந்த நேரத்துக்குள் எவ்வளவு விஷயம்... நீ ஏண்டா இதை என்கிட்டே சொல்லலை?"

"சும்மா ஒரு சுவாரஸ்யம்தான்பா..."

"கல்யாண நாள் கூட பார்த்திருப்பீங்க போல... எனக்கு அழைப்பு உண்டா?"

"அப்பா... இதான வேணாங்கறது... உன் ட்ரேட் மார்க் பேச்சை பேசறே பார்த்தியா?"

"உன் தம்பிக்கு அம்மாக்கு இதெல்லாம் தெரியுமா?" மூர்த்தி கேட்டார்.

வினோத் பேசவில்லை. வினோதினி பேசினாள்.

"அங்கிள்.. நீங்க கோபப்படக் கூடாது... உங்க கோபத்துல அர்த்தம் இருக்கு.. ஒத்துக்கறேன்... ஆனா யோசிச்சுப் பாருங்க... திடீர்னு ஒருநாள் நல்ல விஷயம் முடிவானா நல்லதுதானே? இப்போ பாருங்க எங்களுக்கே முப்பது நடக்குது... இவனுக்கு முடிஞ்சாதான் ரவிக்கும் வழி கிளியராகும். அவனுக்கும் 28 ஆகுது.."

"ஓ... அவனுக்கு வழி கிளியராகணும்தான் நீங்க அவசர ஸ்டெப் எடுக்கறீங்களா? உங்க அவசரத்துக்கு அவன் பெயரைச் சொல்றீங்களாக்கும்... நான் சொல்றப்பல்லாம் ஒண்ணும் தெரியலை... அவன் உங்களைத் தூண்டி விட்டிருக்கானா?"

"அவனுக்கும் எங்க விஷயம் தெரியும் அங்கிள்... அங்கிள்... பீ பிராக்டிகல்... அவனுக்கு தெரியாம இருக்குமா?"

"எது? இப்போ பேசறது கூட அவனுக்கும் தெரியுமோ? அவன் என்ன குண்டு வச்சிருக்கானோ?"

வினோதினி வினோத்தையும், தன் அப்பாவையும் பார்த்தாள்.

முதல் முறையாக அவளிடம் ஒரு தயக்கம் தெரிந்தது.

"ஆமாம் அங்கிள்... அவனும் ஒரு... ஒரு... அவனும் ஒரு பொண்ணை விரும்பறான்."

மூர்த்தி இருக்கையில் பின்னால் சாய்ந்து அமர்ந்து கொண்டார். இன்னும் என்னென்ன விஷயங்கள் இந்த மாலையில் நாம் சந்திக்க இருக்கிறோமோ என்று அயர்ந்தார்.

இடையில் வினோத் தனக்கும் பாலாஜிக்கும் ஏதோ ஆர்டர் கொடுத்திருக்க சர்வர் வந்து வைத்துச் சென்றார்.

"அங்கிள்... நீங்க எதிர்பார்க்கற குண்டு அங்கதான் இருக்கு. ஸாரி... அவன் விரும்பற பொண்ணு நம்ம பொண்ணு இல்லை... ஆனா ஹிந்துதான். சைவம். போதுமா?"

மூர்த்தி தலைகுனிந்து அமர்ந்தார். எதுவும் பேசத் தோன்றவில்லை. அவருக்கு ரேணுவிடம் பேச வேண்டும் போல இருந்தது. அவளுக்கும் தெரியுமா இதெல்லாம் என்றும் தெரியவில்லை.

"அங்கிள்..." வினோதினி கைநீட்டி மூர்த்தி கையைத் தொட்டாள்.

"இதுல ஒண்ணுமில்ல அங்கிள்... இப்பல்லாம் இது சகஜம்.. எனக்கு உங்க வருத்தம் புரியுது. ஆனா வேற வழி இல்ல... டேக் இட் ஈஸி அங்கிள்... நாமதான அவங்களுக்கு.. ரவி நம்ம பையன் இல்லையா... அவனுக்குப் பிடிச்சுருக்குன்னு சொன்னப்புறம் நம்மளால என்ன பண்ண முடியும்? அந்தப் பொண்ணு ரொம்ப நல்ல பொண்ணு... இவன்மேல உயிரையே வச்சுருக்கு..."

திடீரென வினோதினி தன்னைச் சேர்ந்த பெண் போல தோன்றியது மூர்த்திக்கே ஆச்சர்யமாக இருந்தது. அப்படித் தோன்றும் வகையில் அவள் பேசுவதாகத் தோன்றியது. கொஞ்ச நேரம் அவரவருக்கு எதிரே இருந்ததை மௌனமாகச் சாப்பிட்டார்கள். வினோதினி, வினோத் இருவரும் செல்லை நோண்டிக் கொண்டிருந்தார்கள். பாலாஜி மூர்த்தி முகத்தைப் பார்த்தவாறு அமர்ந்திருந்தார்.

"அவங்க எத்தனை நாளாய்ப் பழகறாங்களாம்?"

"அவன் எனக்கெல்லாம் அண்ணன்பா... மூணு வருஷமா பழகறாங்க..."

"என்னது?" மூர்த்தி திகைத்துதான் போனார். அவர் தன் மகன்களுக்கும் தனக்கும் ரகசியம் எதுவும் இருக்காது என்று இதுநாள் வரை நம்பியிருந்தார்.

"அப்போ நாம வீட்டுல பேசி அவனைக் கிண்டல் செய்தது எல்லாம் உண்மைதானா?"

"இல்லப்பா... நாம அல்லது நீங்க சந்தேகப்பட்டு கேட்டது வேற பொண்ணு... இவ வேற பொண்ணு..."

"இதுல இது வேற... ஆனா என்கிட்டே நேரா யாருமே சொல்லலையேடா... நான் உங்க கிட்ட அப்படியா பழகினேன்?" ஆதங்கத்துடன் கேட்டார் மூர்த்தி.

"தெரில்லப்பா... சொல்லலாம்னு எண்ணம் வரும்போதெல்லாம் ஒரு தயக்கம் வந்துடும். நாங்க பழகறது சில மாசங்களுக்கு முன்னாலதான் ரவிக்குத் தெரியும். அப்புறம்தான் அவன் விஷயமும் எங்களுக்குத் தெரியும். அதைக்கூட வினோதான் அவன் கிட்டேருந்து தெரிஞ்சுக்கிட்டா..."

அவனே தொடர்ந்தான். "வினோ அவனுக்கு ரொம்ப தைரியம் கொடுத்தா... அந்தப் பொண்ணையும் பார்த்துப் பேசினா... "

"அவங்க அப்பா அம்மா? அவங்களுக்குத் தெரியுமா?"

"வினோ அவங்க கிட்ட அதெல்லாம் போட்டு உடைச்சிட்டா... அங்கே முதலில் கொஞ்சம் எதிர்ப்பு இருந்தது. அவங்க அம்மாவுக்குதான் கொஞ்சம் அதிருப்தி இருந்தது. அதையும் வினோ சரிப்படுத்தி சமாதானப்படுத்திட்டா... ரவிக்கும் அவளுக்கும் ரொம்ப சந்தோஷம்..."

"அவ பேரு? ஊரு?"

"அவளையே கேட்டாப் போச்சு... " வினோ கையைத் தூக்க உள்ளே நுழைந்தாள் அந்தப் பெண். படபடப்புடன் வந்து மூர்த்தியை வணங்கி நின்றாள். பாலாஜியையும் வணங்கினாள். அவள் முகத்தில் தவிப்பும் பதட்டமும் தெரிந்தது. வினோவின் அமைதி அவளிடம் இல்லை.

அந்த மாலையின் நிகழ்வுகளில் நிலைகுலைந்து அமர்ந்திருந்தார் மூர்த்தி. ஏமாற்றமா? அதிருப்தியா? திருப்தியா? மகிழ்ச்சியா? எது தனக்கான உணர்வு என்று தெரியாமல் அமர்ந்திருந்தார். நிச்சயமாக மகிழ்ச்சி ஒன்று இருப்பதை மனம் சொல்லியது.

சர்வர் வந்து அந்தப்பெண்ணுக்கு ஒரு இருக்கை போட்டு விட்டு நகர்ந்தார்.

"இன்ட்ரொட்யூஸ் யுவர்செல்ஃப் சந்தி..." என்றாள் வினோ.

"ஒரு நிமிஷம்..." என்று கையமர்த்தினார் மூர்த்தி. "ரவி இங்கேதான் எங்கேயோ இருக்கான்னு நினைக்கறேன். அவனையும் கூப்பிடு. அப்புறம் யாரு இருக்கா? இந்தப் பொண்ணோட அப்பாவா, அம்மாவா? அவங்களையும் ஒரேயடியா கூப்பிட்டுடு... இவ்வளோ பேரைக் கூப்பிட்ட நீ ரேணுவை மட்டும் ஏன் விட்டே? இல்லை, அவளும் காத்திருக்காளா வெளியே?" குரலில் லேசான கோபமும் இருந்தது.

புன்னகைத்த வினோ செல்ஃபோனை இயக்க, ரவியும், ரேணுவும் உள்ளே நுழைந்தனர். வேறு யாரும் வரவில்லை.

"இந்தப் பொண்ணோட அப்பாம்மா வெளியூர் போயிருக்காங்க... ஆனா அவங்களுக்கு விவரம் தெரியும். (ரேணுவைக் காட்டி) ஆண்ட்டிக்கு சாயங்காலம்தான் அவசரமா கதை வசனம் சொல்லி அழைச்சு வந்திருக்கோம்... ஆண்ட்டி என்ன நினைக்கறாங்கன்னு ஒண்ணும் இன்னும் சரியாச் சொல்லலை... ஓகே, சந்தி... கமான்.."

"என் பேர் சந்தியா அங்கிள்... நான் ரவியை... ரவியை... நான் க்ரூப் டூ பரீட்சை எழுதி பாஸ் பண்ணி கவர்மெண்ட் வேலை பார்க்கறேன். நானும் பீ ஈ தான் படிச்சிருக்கேன். ரவியை நீங்க கவர்மெண்ட் வேலைக்கு போகச் சொன்னீங்களாம். அவர் போகலை. நான் பாஸ் பண்ணி அங்க வேலை பார்க்கறேன். என் அப்பா ஜான்சன் அண்ட் ஜான்சன்ல வேலை பார்க்கறார். அடுத்த வருஷம் ரிடையர் ஆகிறார். எனக்கு ஒரு அக்கா. கல்யாணமாகி வெளிநாட்டுல இருக்காங்க. ஒரு தம்பி. இப்போதான் வேலைக்குப் போக ஆரம்பிச்சுருக்கான்.. நான் உங்க வீட்டுக்குத் தகுந்த மாதிரி, உங்க மனசு கஷ்டப்படாம நடந்துப்பேன் அங்கிள்..." கடைசி வார்த்தை சொல்லும்போது அவள் குரல் சற்றே இடறியது.

"எங்க மனசு கஷ்டப்படறது இருக்கட்டும்மா... நீங்க ரெண்டு பேரும் கடைசி வரைக்கும் மனஸ்தாபம் இல்லாம இருக்கணும்கறதுதான் முக்கியம். இளமைக் கவர்ச்சில ஆசைப்பட்டுட்டு நடுவுல சண்டை போட்டுட்டு பெத்தவங்களையும் நோகடிக்காம இருந்தா அதுவே போதும்.."

"அங்கிள்..." ஆச்சர்யமாகப் பார்த்தாள் வினோதினி. "அவ்வளவுதானா? ஓகேயா உங்களுக்கு? நான் ரொம்ப

எதிர்ப்பு எதிர்பார்த்து நிறைய லெக்சர் எல்லாம் ரெடி பண்ணி வச்சிருக்கேன்..."

"வேற வழி? எதிர்த்து ஏதாவது பயன் உண்டா சொல்?" வினோவைப் பார்த்துக் கேட்டார். "ஆனா நான் இதை சுத்தமா எதிர்பார்க்கலை. ரெண்டு பேருமா?"

ரேணு சந்தியாவையும், விநோதினியையும் மாறி மாறிப் பார்த்து எடை போட்டுக் கொண்டிருந்தாள். மூர்த்திக்கு அவள் மேலேயே சந்தேகமாகத்தான் இருந்தது. எல்லோரும் தெரிந்து வைத்துக்கொண்டு நாடகம் ஆடுகிறார்களா?

சர்வர் ரேணுவுக்கு காபி மட்டும் கொண்டு வந்து வைத்துவிட்டுப் போனார். கட்டளைகள் திட்டமாய் இருந்தன போலும். "இதெல்லாம் ரெண்டு ஞாயித்துக்கிழமையாய் பிளான் பண்ணி பிளான் பண்ணி மிஸ் ஆனது ஸார்.." சர்வர் புன்னகையுடன் சொல்லி விட்டுச் சென்றார். வினோ அவரைப் பார்த்து கைகாட்டிப் புன்னகைத்தாள். ஓ... நாடகத்தில் இவருக்கும் பங்குண்டா?

"என்ன அங்கிள்... ஆண்ட்டிக்கு முன்னாடியே தெரியுமான்னு யோசிக்கறீங்களா? தெரியாது. முன்னாடியே அவர் கிட்ட சொல்லி இருந்தா அவர் உங்க கிட்ட சொல்லாம இருக்கமாட்டாங்கன்னு தெரியும். வினோத், ரவி ரெண்டு பேருமே சொல்லி இருக்காங்க... முதல்ல அவங்க மூலமாத்தான் வர்றதா இருந்தோம். அப்புறம் வினோத் ஆசைப்பட்ட மாதிரி ஒரு சஸ்பென்ஸோட இருக்கணும்னு முடிவு பண்ணினோம். நீங்க இப்படித்தான் வீட்டுல எதற்கெடுத்தாலும் சஸ்பென்ஸ் கொடுப்பீங்களாமே... ஆனா ஒண்ணு அங்கிள்... வினோத் உங்க குணம் பத்தி சொன்னதால தைரியமா இறங்கினேன். ரொம்ப நல்ல அப்பான்னு சொல்வான். இல்லாட்டா ஏடாகூடமா ஆயிடுமோன்னு பயந்தேன்"

"ஐஸ் வைக்காதே... நான் எதுவும் சொல்லக்கூடிய நிலையில் இல்லை. எனக்கு வேலையே வைக்கலை. சந்தோஷம்... கல்யாணம் எங்கேன்னு சொல்லுங்க... நானும் வரலாமில்ல?"

"அங்கிள்..." வினோதினி முகத்தில் லேசான வேதனையைக் காட்டினாள்

"ஏம்மா.. ரெண்டு பையனைப் பெத்த அப்பன்காரன் இது கூட பேசமாட்டான்னு நினைக்கறியா?" மனசுல தோணாதா? நான் என்ன விக்ரமன் பட கேரக்டரா என்ன?"

"ஸாரி... அங்கிள்... " வினோ தலைகுனிந்து அமர்ந்தாள்.

மூர்த்திக்கு அவளை அந்நிலையில் பார்க்கப் பிடிக்கவில்லை.

"கல்யாண நாள் பார்த்துட்டீங்களா?" என்றார் மறுபடியும்.

வினோதினி கைப்பைக்குள்ளிருந்து ஒரு பேப்பரை எடுத்து நீட்டினாள். அதில் நான்கு தேதிகள் குறிக்கப் பட்டிருந்தன. திகைப்படைந்த மூர்த்தி கோபத்துடன் மகனைப் பார்த்தார்.

"என்ன இது?"

"அங்கிள்... இதெல்லாம் சஜஷன்ஸ்தான். நாம ஒவ்வொண்ணா பேசலாம்..'

"இங்கேயா.. இப்போதா? இப்போதான் தலைகுனிஞ்சு உட்கார்ந்திருந்தே..."

"பின்ன எனக்கும் வருத்தம் வராதா அங்கிள்... அதே சமயம் அதை எல்லாம் பார்த்தா முடியுமா? நாங்க இதற்கு மேலயே பிரச்னை எதிர்பார்த்தோம்... ஸோ... "

"இதோ பாரும்மா.. நாங்க நாளு கிழமை பார்க்கறதுன்னு எப்பவுமே ஒருத்தர் கிட்டதான் பார்ப்போம். எங்க வெல்விஷர் அவர். ... நான் அவரைப் போய்.."

"வைத்தியநாதன் மாமாதான அங்கிள்... அவர் குறிச்சுக்க கொடுத்த நாட்கள்தான் இது..."

மயக்கம் வராத குறை மூர்த்திக்கு.

அடுத்த இதழில் நிறைவு பெறும்.

உன்மத்தம்

சௌம்யா ராஜாராம்
பாரதி நகர், முகவை.

கண்ணுக்குக் காட்சியையும் சிந்தைக்கு கருத்தினையும் தருவது கலையாகும். கருத்துடன் கலைத்திறனை நோக்காகக் கொண்டு காலவெள்ளத்தைக் கடந்து நிற்பன ஆகும். சிற்றூர் மக்களின் வாழ்வியல் நிகழ்வுகளில் பிரித்துப் பார்க்க இயலாக் கூறுகளாகத் திகழ்பவை நிகழ்கலைகள்.

நிகழ்கலை வாழ்வியலோடு ஒருங்கிணைந்த ஒன்றாக வாழும் சிற்றூர் மக்களுள் கலைதான் வாழ்வே என்று எண்ணும் கலைஞர்களின் வாழ்வியல் போராட்டங்கள் எப்படியிருக்கும் என்பதை பற்றியும், தனக்கு முடியாத சூழ்நிலையிலும் அக்கலையின் மீதுள்ள ஆர்வம் குறையாது அதனை வளர்க்க நினைத்து தன் வாழ்வே கலைக்காகத்தான் என்றிருக்கும் கலைஞர்களையும் பற்றியும் பேசும் நூல்தான் 'உன்மத்தம்'.

குடும்ப சூழ்நிலையால் உடலளவில் அக்கலையை பிரிந்திருந்தாலும் மனதளவில் தன்னுடனே இருக்கும் அக்கலையினைப் பற்ற ஏங்கும் ஒரு கலைஞனின் மனப்போராட்டத்தை நம் கண்முன் காட்சிப்படுத்துகிறது இந்நாவல். இக்கதையின் முக்கியக் கதாபாத்திரமாக இருக்கும் ராஜவேலு சில காரணங்களாலும் நாடக நடிகனான மூத்த மகன் விபத்தில் இறந்த துக்கத்தாலும் தான் விரும்பி ஏற்றுக் கொண்ட கலையை விட்டொழிக்கிறார் என்றாலும் தன்னுள் ஆக்கிரமித்த அக்கலையை தனிமையின் தாக்கத்தில் மீண்டும் உயிர்ப்பிக்க நினைக்கிறார். இக்கலையினை தன்னால் மேலும் வளர்க்க முடியும் என்ற எண்ணத்தோடு மனதுடன் போராட்டம் நடத்தும் ஒரு கலைஞனை ஊரும் உறவும் எப்படிப் பார்க்கும் என்பதையும், அக்கலைஞன் என்ன ஆனான் என்பதையும் பற்றிப் பேசும் இந்நாவலை நான் வாசித்து மகிழ்ந்தேன். நீங்களும் வாசிக்க வேண்டும்.

ஒரு விசயத்தை கலை நோக்கோடு அணுகி வாழ்வியலோடு கலந்து நாளடைவில் வெற்றிகரமாக அமைத்துக் கொடுக்கும் எழுத்து பாணி கொண்ட எழுத்தாளர் பரிவை சே. குமார் அவர்களின் எழுத்தில் உருவான 'உன்மத்தம்' ஒரு தகவல் களஞ்சியம் என்றுதான் சொல்ல வேண்டும். நாம் அறிந்திராத பல செய்திகளை உள்ளடக்கி கலையின் உச்சத்தைத் தொட்டு நிற்கும் புத்தகத்தை உங்களுக்காக இந்தக் கட்டுரையின் வாயிலாகப் பரிந்துரைக்கிறேன்.

கூத்து பற்றித் தெரிந்தவர்கள் மட்டுமின்றி, அதைத் தெரியாதவர்களும் இந்நாவலை வாசித்தால் அது குறித்து அறிந்து கொள்ள முடிவதுடன் ஒரு தீராத் தாகம் கொண்ட கலைஞனுடன் 'உலக சயனா சரணம்' என அவன் பாடும் மேடையில் அமர்ந்து ரசித்த மகிழ்வைப் பெற முடியும்.

ராட்சசி

லலிதா சங்கர்

பத்திரப்பதிவு அலுவலகத்தில் காலையிலிருந்து காத்திருந்து, காத்திருந்து ஒருவழியாக மாலைக்குள் பத்திரப்பதிவு முடிந்து வாங்குபவரும் விற்பவரும் ஒருவரையொருவர் கைகுலுக்கி சந்தோஷத்தைப் பகிர்ந்துகொண்டனர்.

ரேவதிக்கு மனதிற்குள் குபீரென ஒரு சந்தோஷம். அப்பாடா! கொஞ்சம் பழைய வீடுதான் ஆனாலும் பெரிய வீடு, கனவு இல்லம், மிகப்பெரிய குடியிருப்பு வளாகம், இனி ஆறுபேரோடு மல்லுக்கட்டிப்போராடும் வாழ்க்கை இல்லை.

அவர்களோட பழைய பத்திரங்களை அவர்களிடம் குடுக்கணுமா?

கேள்வி கேட்பதற்குள் வேண்டாமென்ற தொனியில் அந்தப்பெண்மணி தன்னுடைய பையின் ஜிப்பை இழுத்து மூடினாள்.

"போதும்டா சாமி! இந்த வீட்டை ஒருவழியா வித்து முடிச்சுட்டோம்!" என்ற அவளின் உடலின் மொழி ரேவதிக்கு முதலில் புரியவில்லை. 'பெரிய மாடமாளிகையில் குடியிருக்கும் இவளுக்கு இந்த வீடு ஒரு பொருட்டில்லை போல..! நமக்குத்தான் அதோட அருமை தெரியும்' என்று நினைத்துக்கொண்டாள்.

அடுத்தடுத்த நாட்களில் புதுமனை புகுவிழா சிறப்பாக முடிந்தபின் நல்லநாளில் குடிவந்து, அந்தப்பரந்து விரிந்த பால்கனியில் டீயைக்குடித்தபடி அமர்ந்திருந்தபோது அவளுக்குள் அளவில்லா சந்தோஷம். அந்த சந்தோஷம் கொஞ்சநேரம்தான், மேல்வீட்டிலிருந்து பெருங்குரலில் சத்தம்! "ஆமாம்! நான் அப்படித்தான்! இப்போ என்ன பண்ணனுங்கறீங்க? அதெல்லாம் முடியாது..! நான் சம்மதிக்க மாட்டேன்."

அவள் பெருங்குரலில் கத்துவது தினசரி வாடிக்கையானது.

மெல்ல மெல்ல ஒவ்வொன்றாகப்புரிய ஆரம்பித்தது.

அன்று வீட்டு வாசலில் குப்பை பையை வைக்க கதவைத் திறந்தால் எதிரில் ஒரு தெருநாய், பக்கத்துக்கு வீட்டு வாசலில் வைத்திருந்த குப்பைக்கவரை தோண்டித்துருவிக்கொண்டிருந்தது. அதற்குத்தேவையான மாமிசத்துண்டை கவ்வியபடி அது ஓடவும், எனக்கு அருகில் இருந்த வீட்டுக்காரி அதை வீடியோ எடுத்து வாட்சாப் குழுவில் அந்த வீடியோவைப் பகிர குழு பற்றி எரிந்தது.

எங்கள் வீட்டின் மேல் வீட்டில் குடியிருக்கும் அந்தப்பெண்மணியை அனைவரும் வறுத்து எடுக்க ஆரம்பித்தனர்.

இந்தபொம்பளைக்கு வேற வேலையே இல்லை. தெருநாய்க்கு சோறு போடறதுன்னா தெருவுல போட வேண்டியதுதானே! அதைக்கூட்டிட்டு வந்து நம்ப காம்பவுண்டுக்குள்ள விட்டா என்ன ஆறது? ஒரு இங்கிதம் வேணாம்? அன்னிக்கு அப்படித்தான் என்னோட கார் பார்க்கிங்கில் ஒரு நாய் அசிங்கம் பண்ணி வெச்சுருக்கு. இந்தபொம்பளையோட ஒரே ரோதனையாப்போச்சு.

ஆனால் எல்லோரும் குரூப்பில்தான் பொங்குவார்கள் நேரில் அவளிடம் மல்லுக்கட்ட யாருக்கும் தைரியம் இல்லை.

ஆனால் அந்த ஒற்றை மனுஷி அதே குரூப்பில் ஒரு புகைப்படத்தைப்பகிர்ந்தாள். இங்கிதத்தைப்பத்தி பேசறவங்க இதுக்கு முதல்ல பதிலைச்சொல்லுங்க. கார்பார்க்கிங்கில் நடந்து வரும்போது தலைக்குமேல் கம்பிவலையில் தொங்கிக்கிட்டிருக்கும் இதெல்லாம் என்ன? உபயோகித்து ஜன்னல் வழியாக தூக்கி எறிந்த ஆணுறைகள் அந்தக்கம்பி வலையில் தொங்கிக்கொண்டிருந்தன. "ஐந்தறிவு ஜீவனோட இங்கிதத்தைப்பத்தி பேசறதுக்கு இந்த ஆறறிவு மனுஷங்களுக்குத் தகுதி இருக்கான்னு யோசிச்சுட்டுப்பேசுங்க." ஊரு வாயை ஒரு புகைப்படத்தால் அடக்கினாள்.

பார்க்கில் நடைப்பயிற்சி போகும்போதும் அவளைப்பற்றியே பேச்சு.

இருந்தாலும் ஒரு பெரிய குடியிருப்பில் இப்படி நாய்களை வைத்துக்கொண்டு படுத்துவேன்னு சொல்றது என்ன நியாயம்? வேணும்னா வீட்டுல வெச்சு வளர்த்துக்கலாமே!

அத ஏன் கேக்கறீங்க? அவங்க வீட்டுக்குள்ள ஒரு பெரும் நாய்க்கூட்டமே இருக்கு அதைத்தவிர இந்த நாய்களையும் கட்டி மேய்க்குது அந்தப் பொம்பள. தினமும் காலைலயும் ராத்திரியும் ஒரு பெரிய சோத்துமூட்டையைக்கட்டிக்கிட்டு எல்லா நாய்களுக்கும் வெச்சுட்டு வருமே! நீங்க பாத்ததில்லையா?

எப்படித்தான் இந்த மாதிரி அராஜகம் பண்ணறாங்களோ! பேசாம போலீஸ்ல போய் கம்பளைண்ட் பண்ணலாம்ல?

அதுவும் பண்ணியாச்சு. வக்கீல் மாதிரி பேசிட்டு வெளில வந்துடுவாங்க.

ரேவதிக்கு அவர்கள் பேசுவதைக்கேட்கும்போது. அந்தப்பெண்மணி எப்படி இருப்பாளோ? அவளைப்பார்த்தே தீரவேண்டும் என்று ஒரு குறுகுறுப்பு. அன்று வீட்டிற்குத் தேவையான காய்கறி வாங்குவதற்காக அவள் வெளியில் வரவும், அவளுக்கு முன்பாக நடந்து சென்ற அந்தப்பெண்மணியைப்பார்த்து சிலர் குசுகுசுவென்று முனகியதில் தெரிந்தது அவள்தான் மேல்வீட்டில் குடியிருக்கும் பெண்மணி என்று.

மாநிறத்தில் பெருத்த உருவம், தலையை பாப் கட் செய்திருந்த அவள் தலையும், உருவமும், நிமிர்ந்த நடையும் அவள் இந்த உலகத்தைத் துச்சமென மதிப்பதை சொல்லாமல் சொல்லியது.

ரேவதி அவளைப்பார்த்து மென்மையாக ஒரு புன்னகையை உதிர்த்தாள்.

அவள் அந்தப்புன்னகையை பார்த்தும் பார்க்காதது போல காய்கறிகளை மும்மரமாக பொறுக்கி வாங்கியபடி நடையைக்கட்டினாள். ரேவதியும் அவள் பின்னே நாய்க்குட்டிபோலத் தொடர்ந்தாள்.

லிப்ட்டில் அவள் ஏற, பின்னோடயே இவளும் ஏறினாள்.

ரேவதி வலிந்து தன்னை அறிமுகப்படுத்திக்கொண்டாள்.

என் பெயர் ரேவதி. நான் உங்க கீழ் வீட்டுக்குப்புதுசா கூட வந்துருக்கேன்.

அதுக்கென்ன இப்போ? நீயும் என்கிட்டே சண்டைக்கு வரப்போறாயா? எதுவா இருந்தாலும் இப்போ பேச முடியாது. எனக்கு நேரம் இல்ல. அவள் விடுவிடுவென்று தன் வீடு சென்று கதவை அடைத்துக்கொண்டாள். ரேவதி தொங்கிய முகத்துடன் லிப்ட்டில் இறங்கி வீடு வந்தாள்.

அடுத்தடுத்த நாட்களில் பெரும் பிரயத்தனப்பட்டு தொடர் அழைப்பிற்குப்பிறகு குடியிருப்பு சங்கக்கூட்டத்திற்கு அவள் வரப்போவதாகத் தெரிந்தவுடன் எல்லோர் மனதிலும் பரபரப்பு புகுந்துகொண்டது.

கூட்டம் கூடியது. ஒரு அரைமணிநேரம் கழிந்திருக்கும். நிமிர்ந்த நடையுடன் அவள் வரவும், இன்று அவளின் அராஜகத்துக்கு ஒரு முடிவு கட்ட வேண்டும் என்று அனைவரும் பொங்கிப்பொங்கி தங்கள் ஆதங்கத்தைக்கொட்டித் தீர்த்தனர்.

அனைத்தையும் அமைதியாகக்கேட்டபடி இருந்த அவள் தலைவரிடமிருந்து மைக்கை வாங்கினாள்.

இங்க பாருங்க! உங்ககிட்ட பேசிப்பிரயோசனமில்லைன்னு தெரியும் இருந்தாலும் அந்த வாயில்லா ஜீவன்களுக்கு வக்கீலா தெரிஞ்சோ தெரியாமலோ என்னோட வாழ்க்கை அமைஞ்சு போச்சு. ஒரு வக்கீலா பேச வேண்டிய கட்டாயம், பேசிடறேன். சாகறவரைக்கும் அதுங்களுக்காகவே வாழ்ந்து செத்துப்போணும்னாலும் போறேன். வேற என்ன பண்றது?

இப்போ இந்த குடியிருப்புல ஒரு மூணு அனாதைக்குழந்தைங்க சுத்திக்கிட்டிருக்குங்க அது வேற யாரும் இல்ல, ஒரு பஞ்சாபி தம்பதியும், ஒரு குஜராத்தி தம்பதியும் வளர்த்த குழந்தைங்கதான். அந்த ரெண்டு தம்பதிகளும் செத்துப்போன பிறகு இந்தக்குழந்தைகளோட வீடு பறிபோயிடுச்சு. அதுங்க மனுசங்க கிடையாது அதுங்களோட குடியிருப்பை அவங்களால விலைக்கு வாங்க முடியாது. அந்த வயசானவங்களைத் தேடிக்கிட்டு அந்த ரெண்டு வீட்டையும் சுத்திசுத்தி வருதுங்க பாவம்.

அதே மாதிரிதான் தெருவுலையும் அங்கங்க வீடு கட்டும்போது தங்களோட பாதுகாப்புக்கு நாய்களை வளர்த்துட்டு அப்புறம் அதுங்களை அனாதையா இந்த மனுஷங்க கழட்டிவிட்டுட்டு வேற வீடு கட்டப்போயிடறாங்க. இந்தக்குழந்தைகள் அனாதைகளா தெருவுல திரியுதுங்க. எல்லாத்துக்கும் மூல காரணம் நாம மனுஷங்கதாங்கறதை மறந்துட்டு இந்த ஜீவராசிகளை க ரிச்சுக்கொட்டறது எந்த விதத்துல நியாயம்?

ஏதோ என்னால முடிஞ்சது..! அதுங்களுக்கு சோறு போடறேன். என் வீட்டுக்கு ஆசையா வர்ற குழந்தைகளை வீட்டுக்குள்ள வளர்க்கறேன், தன்னோட வீட்டுல வளரணும்னு போராடறதுங்களை சாப்பாடு போட்டுப்பார்த்துக்கறேன். உங்க வீட்டு மாடிப்படி ஏறி வர்ற இடத்துல சின்னதா கதவு போட்டுக்கிட்டிங்கன்னா அது படியேறி வந்து குப்பையை கிளறாதுங்க அதேநேரம் தங்கள் எஜமானர்கள் வாழ்ந்த வீட்டைச்சுத்தி காலம் கழிச்சிடும். கொஞ்சமே கொஞ்சம் இரக்கம் காமிச் சீங்கன்னா போதும். எல்லாருக்கும் நிம்மதி. கண்ணில் இருந்து வழிந்த கண்ணீரை துடைத்தபடி அவள் விறுவிறுவென்று வெளியேறினாள்.

அதன்பின் அங்கு பெருத்த அமைதி. ரேவதிக்கு ஒன்று புரிந்தது. ராட்சசி அவள் அல்ல..! தன்னையும் சுற்றி இருந்தவர்களையும் ஒரு பார்வை பார்த்துக்கொண்டாள். எல்லாரிடமும் கண்ணுக்குத் தெரியாத கோரைப்பல் வெளியே நீட்டிக்கொண்டு அவள் நினைப்பது சரிதான் என்று சொல்லாமல் சொல்வதுபோல அவளுக்கு ஒரு பிரமை.

நந்தனின் நாலு கட்டு வீடு

அ. கௌரி சங்கர்
வேளச்சேரி, சென்னை

WriterSCafe - எழுத்தாளர் சங்கமம் நடத்திய உலகளாவிய சிறுகதை போட்டியில் பங்கு பெற்று, நடுவர்களால் பரிசுக்குரிய கதைகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பதினைந்து கதைகள் 'நந்தனின் நாலு கட்டு வீடு' என்ற சிறுகதை தொகுப்பாக வெளிவந்துள்ளது.. கதைகள் மாறுபட்ட கோணங்களில், வித்தியாசமான கருப்பொருட்களை மையப்படுத்தி எழுதப்பட்டவை.

www.pustaka.co.in பதிப்பித்த இந்தப் புத்தகத்தை மின்புத்தகம் மற்றும் காகித புத்தகமாக வாங்கி படிக்கலாம்.

சிறுகதைகளை பற்றிய என்னுடைய பார்வை:

ஈரம் - முதல் பரிசு பெறும் சிறுகதை – எழுதியவர் - திரு அறிவு செல்வன், கட்டிடம் வேலை நடக்கிறது. தொழிலாளிகளின் சிரமங்களை உணர்ந்து அவற்றை போக்கும் வகையில் வீடு கட்டுபவர் காட்டும் கருணை பற்றிய கதை. மனதை நெகிழவைக்கும் நடையில் எழுதப்பட்ட கதை

கோழிக்கூத்து - இரண்டாம் பரிசு பெறும் கதை - எழுதியவர் - திருமதி ரா.சண்முகவள்ளி, வேலையில்லாமல் சிரமப்படும் ஒரு கூத்து கலைஞனின் கதை. கணவன் மனைவிக்கு இடையில் நடைபெறும் சம்பாஷணைகள் மற்றும் கிராமத்து வசனங்கள். நேரில் பார்ப்பது போன்று எழுதியது எழுத்தாளரின் திறமை. மனம் கவர்ந்த கதை.

ஊன்றுகோல் - மூன்றாம் பரிசு பெறும் சிறுகதை - எழுதியவர் - திருமதி மஞ்சுளா ஸ்வாமிநாதன், குழந்தை Special Child என்று வரும்போது அதன் பெற்றோர் மனதளவில் படும் பாட்டை சொல்லும் சிறந்த கதை. கதையின் பயணம் அற்புதம்.

சவக்காரம் - ஆறுதல் பரிசு பெறும் சிறுகதை - எழுதியவர் - திரு சந்துரு மாணிக்கவாசகம், திருநம்பிகள் என்ன தான் உழைத்து வாழ முயற்சி செய்தாலும், சமூகத்தில் பல வகையில் ஓரம்கட்டப்படுகிறார்கள் என்பது பற்றிய கதை. சிறந்த கதை மற்றும் நடை.

அன்புள்ள அக்கா - ஆறுதல் பரிசு பெறும் சிறுகதை - எழுதியவர் - திரு கு உதயசூரியன், சிரமப்பட்டாலும், தன்னை நம்பி வாழும் வயதில் சிறிய தம்பி தங்கைகளுக்காக சிரமப்படும் ஒரு அக்காவின் கதை.

மதுமதி - ஆறுதல் பரிசு பெறும் சிறுகதை -எழுதியவர் - திரு இந்திரநீலன் சுரேஷ், சூழ்நிலை காரணமாக விவாகரத்து பெற்றுக்கொண்ட தம்பதிகளின் பெண் வயது வந்த பின்னர் திருமணம் செய்துகொள்ள விரும்புகிறாள். மகளுடன் வாழும் அம்மா - தனியாக வாழும் அப்பா - இந்த வகையில் சமூகத்தில் வாழும் பெண்களின் மன வேதனையை மௌனமாக வெளிப்படுத்தும் கதை. அருமையான நடை மற்றும் வசனங்கள்.

கிராண்ட்மா - ஆறுதல் பரிசு பெறும் சிறுகதை - எழுதியவர் - திருமதி சுதா திருநாராயணன், இந்தியாவில் வசிக்கிறார் பாட்டி. வெளி நாட்டில் வசிக்கும் மகன், மருமகள் மற்றும் பேத்தி இந்தியாவிற்கு வருகிறார்கள். பேத்தியுடன் இறுதி காலத்தில் வாழவேண்டும் என்று நினைக்கும் பாட்டியின் விருப்பத்தை உணர்ந்து நிறைவேற்றி வைக்கிறார் பெயர்த்தி. இன்றைய காலத்திற்கு தேவையான சிறுகதை.

கானல் நீர் - ஆறுதல் பரிசு பெறும் சிறுகதை -எழுதியவர் - திருமதி உஷா சிவமணி, குழந்தைகள் வெளிநாடுகளில் வேலை பார்ப்பதை பற்றி பெருமை பேசிய காலம் முடிந்து குடும்பத்தாருடன் வாழும் வாழ்க்கையை எதிர்பார்க்கும் முதியவர்களை பற்றிய ஒரு கதை.

கரி எஞ்சின் - ஆறுதல் பரிசு பெறும் சிறுகதை - எழுதியவர் - திரு வி. கே. சங்கர், செய்யும் தொழிலே தெய்வம் என்று கருதி கரி எஞ்சினோடு வாழ்ந்து ஓய்வு பெற்று மரணப்படுக்கையில் இருக்கும் ஒருவர் மனநிலையறிந்து அவருக்கு எஞ்சினின் மாடலை தந்து சுகமான மரணத்தை ஏற்றுக்கொள்ள உதவும் மகனை பற்றிய ஒரு சிறுகதை. எளிமையான நடை.

வேண்டுதல் - ஆறுதல் பரிசு பெறும் சிறுகதை - எழுதியவர் - விஜி ரவி, ஆசையோடு சிறிய ஆட்டுக்குட்டியை வளர்க்கிறாள் ஒரு சிறு பெண். ஆட்டுக்குட்டி கோவிலுக்கு தரப்பட குழந்தையின் மனம் வாடுகிறது. குழந்தையின் மன வலியை பற்றி சொல்லும் கதை. அருமையான நடை மற்றும் மனதை ஈர்க்கும் கதை.

மனசே மனசே - ஆறுதல் பரிசு பெறும் சிறுகதை - எழுதியவர் - திருமதி லலிதா சங்கர், ஏற்கனவே பெண் குழந்தையுடன் தனியாக வாழும் பெண் தனக்கு விருப்பமான ஒருவருடன் திருமணம் செய்து கொள்ளுகிறாள். மாமியார் மருமகளுக்கு குழந்தை உண்டு என்பதை சொல்ல மறுக்கும் நிலையில் மருமகள் மாமியாரை உண்மையை பகிரங்கமாக மற்றவர்களிடம் சொல்ல வைக்கும் சிறுகதை. நல்ல நடை.

மெழுகு மனது - ஆறுதல் பரிசு பெறும் சிறுகதை - எழுதியவர் - திரு விஜயகுமார் ஜெயராமன், வயதான ஒரு பாட்டி துடைப்பம் விற்று நேர்மையாக ஜீவனம் நடத்துகிறாள். ஆரம்பத்தில் அவளை உதாசீனம் செய்யும் வாலிபன், சிரமப்பட்டு வாழும் நிலையிலும் நேர்மையாக வாழ்ந்து பாட்டி மரணம் அடைவதை அறிந்து எப்படி மனம் பதைக்கிறான் என்பது பற்றிய கதை. இன்றைய இளம் வயதினருக்கான சிறுகதை.

மாமரத்தின் அடியில் - ஆறுதல் பரிசு பெறும் சிறுகதை - எழுதியவர் - திரு ஏ.வி.ராஜகோபாலன், 90 வயதான ஒரு பெரியவர் அபார்ட்மெண்ட் வளாகத்தில் இருக்கும் ஒரு மாமரத்திற்காக வாதாடும் கதை. ஆனால் அதற்கு பின்னால் வளைய வரும் ஒரு சோக கதை.

நந்தனின் நாலு கட்டு வீடு - ஆறுதல் பரிசு பெறும் சிறுகதை - எழுதியவர் - குமரி உத்ரா, பல வருடங்கள் கழிந்து வெளிநாட்டில் இருந்து தன்னுடைய சொந்த கிராமத்திற்கு வரும் இளைஞன் தனது கிராமத்து வீட்டை பகுதி பகுதியாக நோட்டம் விடுகிறான். நினைவுகள் பின்னோக்கி சென்று கொண்டும் வந்து கொண்டும் இருக்கின்றன. நினைவோட்டங்களை பிசிறு இல்லாமல் தந்து இருக்கிறார் எழுத்தாளர். அருமையான நடை.

பல்லக்கு தூக்கி - ஆறுதல் பரிசு பெறும் சிறுகதை - எழுதியவர் - சுசி கிருஷ்ணமூர்த்தி, ஒரு பெண் என்றுமே ஒரு பல்லக்குத் தூக்கியாக இருக்கத்தான் விரும்புகிறாள். அவள் இல்லாவிட்டால் அந்த பல்லக்கு நகராது என்ற நம்பிக்கைதான் அவளை நலமுடன் வாழ வைக்கிறது. முற்றிலும் உண்மை.

மனசே மனசே - ஆறுதல் பரிசு பெறும் சிறுகதை - எழுதியவர் - திருமதி லலிதா சங்கர், ஏற்கனவே பெண் குழந்தையுடன் தனியாக வாழும் பெண் தனக்கு விருப்பமான ஒருவருடன் திருமணம் செய்து கொள்ளுகிறாள். மாமியார் மருமகளுக்கு குழந்தை உண்டு என்பதை சொல்ல மறுக்கும் நிலையில் மருமகள் மாமியாரை உண்மையை பகிரங்கமாக மற்றவர்களிடம் சொல்ல வைக்கும் சிறுகதை. நல்ல நடை.

மெழுகு மனது - ஆறுதல் பரிசு பெறும் சிறுகதை - எழுதியவர் - திரு விஜயகுமார் ஜெயராமன், வயதான ஒரு பாட்டி துடைப்பம் விற்று நேர்மையாக ஜீவனம் நடத்துகிறாள். ஆரம்பத்தில் அவளை உதாசீனம் செய்யும் வாலிபன், சிரமப்பட்டு வாழும் நிலையிலும் நேர்மையாக வாழ்ந்து பாட்டி மரணம் அடைவதை அறிந்து எப்படி மனம் பதைக்கிறான் என்பது பற்றிய கதை. இன்றைய இளம் வயதினருக்கான சிறுகதை.

மாமரத்தின் அடியில் - ஆறுதல் பரிசு பெறும் சிறுகதை - எழுதியவர் - திரு ஏ.வி.ராஜகோபாலன், 90 வயதான ஒரு பெரியவர் அபார்ட்மெண்ட் வளாகத்தில் இருக்கும் ஒரு மாமரத்திற்காக வாதாடும் கதை. ஆனால் அதற்கு பின்னால் வளைய வரும் ஒரு சோக கதை.

நந்தனின் நாலு கட்டு வீடு - ஆறுதல் பரிசு பெறும் சிறுகதை - எழுதியவர் - குமரி உத்ரா, பல வருடங்கள் கழிந்து வெளிநாட்டில் இருந்து தன்னுடைய சொந்த கிராமத்திற்கு வரும் இளைஞன் தனது கிராமத்து வீட்டை பகுதி பகுதியாக நோட்டம் விடுகிறான். நினைவுகள் பின்னோக்கி சென்று கொண்டும் வந்து கொண்டும் இருக்கின்றன. நினைவோட்டங்களை பிசிறு இல்லாமல் தந்து இருக்கிறார் எழுத்தாளர். அருமையான நடை.

பல்லக்கு தூக்கி - ஆறுதல் பரிசு பெறும் சிறுகதை - எழுதியவர் - சுசி கிருஷ்ணமூர்த்தி, ஒரு பெண் என்றுமே ஒரு பல்லக்குத் தூக்கியாக இருக்கத்தான் விரும்புகிறாள். அவள் இல்லாவிட்டால் அந்த பல்லக்கு நகராது என்ற நம்பிக்கைதான் அவளை நலமுடன் வாழ வைக்கிறது. முற்றிலும் உண்மை.

ஓ.கே. கண்மணி

விஜி சம்பத்
சேலம்

அருணுக்கும், இந்துவுக்கும் கோலாகலமாகத் திருமணம் நடந்து முடிந்ததில் அருணின் அம்மாவுக்கு சந்தோஷமாக இருந்தாலும், திருமணம் முடிந்த ஒரு வருடத்திற்குள்ளாகவே, கணவனை விவாகரத்து செய்து விட்டுப் பிறந்த வீட்டோடு வந்து விட்ட மகள் சுமதியை நினைத்துப் பெற்ற மனம் கனத்துப் போனது...! சுமதியின் கணவன் வாசுவின் குடிப் பழக்கத்தால் மனம் வெறுத்துப் போன சுமதி, அவனை விவாகரத்து செய்து விட்டாள்.

விவாகரத்தாகி மூன்று வருடங்களாகியும் இரண்டாவது திருமணம் செய்து கொள்ள பிடிவாதமாக சுமதி ஒத்துக் கொள்ளவில்லை.

எத்தனை காலம்தான் தங்கைக்காக அருண் காத்திருப்பான்? அவன் காத்திருக்கலாம்... அவனுக்கென்றே பிறந்தது முதல் காத்திருக்கிறாளே தன் அண்ணன் மகள் இந்து. அவளுக்கென்ன பதில் சொல்வது? என்று யோசனை, கவலைகளுக்கிடையே அல்லாடிக் கொண்டிருந்தாள் மங்களம். திடீரென்று அவளுடைய அண்ணனுக்கு ஹார்ட் அட்டாக் வந்து உயிர் பிழைத்ததே அதிசயம் என்றாகி விட்டது.

அவருக்காக உடனடியாக இந்து-அருண் திருமணத்தை நடத்த வேண்டியதாகி விட்டது. இருபத்தி எட்டு வயதில் வாழாவெட்டியாக மகள் இருக்கையில், புதுமணத் தம்பதிகளின் சந்தோஷம் பாதிக்கப் பட்டால் என்ன செய்வது...? அவர்களைப் பார்த்து சுமதி வேதனையில் மனம் புழுங்கினால் என்ன செய்வது? என்றெல்லாம் யோசித்த மங்களம். ஒரு முடிவுக்கு வந்தாள்.

அன்றிரவு மணமக்களைத் தனியறைக்கு அனுப்பி விட்டுத் தன் கணவரிடம், "என்னங்க...நான் ஒரு முடிவுக்கு வந்துட்டேன். இந்த வாரக் கடைசில நான், நீங்க, சுமதி மூணு பேரும் நம்ம கிராமத்து வீட்டுக்குப் போயிடலாம். நீங்களும் ரிடையரானதில இருந்தே சொல்லிகிட்டு இருக்கீங்க இல்ல" என்றாள். தன் மனைவியின் உள்ளத்தை அணுவணுவாகப் புரிந்து கொண்டிருக்கும் சுந்தரத்துக்குத் தெரியாதா அவள் மனப் போராட்டம்?

"அதுக்கென்னம்மா... தாராளமா நீ சொன்ன மாதிரியே செஞ்சிடலாம்...! இப்ப நீ கொஞ்சம் தூங்கி ரெஸ்ட் எடு" என்றார் பரிவும், பாசமுமாக...!

அங்கே தனியறையில் ஆசை... ஆசையாய்த் தனக்காகக் காத்துக் கொண்டிருந்த அருணிடம், "அருண்...நான் ஒண்ணு சொன்னா நீ கோவிச்சுக்காம கேப்பியா?" என்றாள் இந்து.

"ஒண்ணு...என்ன...? ரெண்டு, மூணுன்னு எத்தனை வேண்ணா சொல்லேன்...தாராளமாக் கேக்கறேன் "என்றான் அருண் காதலும்... அசடும் வழிய!

"நான் கொஞ்சம் சீரியசா பேசறேங்கறதைப் புரிஞ்சுக்கோ அருண். எனக்கு இப்ப நம்ம கல்யாணம் நடந்ததில இஷ்டமே இல்ல..."

"அடிப் பாவி என்ன சொல்றே...? உம் மனசுல வேற யாராவது?" என்று அதிர்ச்சியான அருண் தலையில செல்லமாகக் குட்டிய இந்து ..

"பொறுமையாக் கேளு அருண்...! சுமதிக்கு நல்லதா ஒரு வாழ்க்கைய அமைச்சுக் குடுத்து, அத்தை, மாமாக்கு மனநிம்மதி கிடைச்சப்புறமாதான் நாம கல்யாணம் பண்ணிக்கணும்னு இருந்தேன். ஆனா அப்பாவுக்காக இப்ப அவசரமா கல்யாணம் பண்ணிக்க வேண்டியதாயிடுச்சு. அதனால என்ன...?

எவ்வளவு சீக்கிரமா சுமதி மனசை மாத்தி, அவளுக்கு நல்ல ஒரு வாழ்க்கைய ஆரம்பிச்சுக் குடுக்கறோமோ...அன்னைக்குத்தான் நாம நம்ம வாழ்க்கையையும் ஆரம்பிக்கணும்...இதுக்கு உன்னுடைய சம்மதமும், ஆதரவும் வேணும்..."என்று கெஞ்சலாகக் கேட்க, இந்துவுக்கு தன் தங்கையிடமும், பெற்றோர்களிடமும் இருக்கும் அக்கறை தன்னிடம் இல்லையே என்று மனசுக்குள் வெட்கமும் வருத்தமும் அடைந்த அருண் இந்துவின் கரங்களைப் பற்றி நெஞ்சோடு அணைத்துக் கொண்டவன் "ஓ.கே கண்மணி" என்றான் மன நெகிழ்வோடு..!

தேர்வு முடிவு

சுதா கணபதி



யூனிவெர்சிட்டி தேர்வுகள் முடிந்து காலேஜ் லீவு. யூடியூபில் சுவாரஸ்யமாய் படம் பார்த்துக் கொண்டிருந்தா சுஜாதா, சிணுங்கிய செல்போனைச் சலிப்போடு எடுத்தாள்.

“ஹாய் வாணி “

“சுஜி அரை மணியா உன்னோட நம்பர் ட்ரை பண்ணறேன் . நாளைக்கு யூ.ஜி ரிசல்ட்ன்னு காலேஜ் க்ரூப்பில் மெசேஜ் வந்திருக்கு .”

“மை காட்… அடுத்த வாரம் தான் ரிசல்ட்டுன்னு ஹெச்.ஓ.டி மேடம் சொன்னாங்களே. திடீர்னு இப்படி குண்டைப் போடறையே… தகவலுக்கு தாங்க் யூ”.

“ரொம்ப டென்ஷனா இருக்கும்மா. ரிசல்ட் நல்ல படியா வரணுமே” நகத்தைக் கடித்தபடி அம்மாவிடம் புலம்பினாள்.

“சுஜா நீ எப்பவுமே நல்ல மார்க்குதான் வாங்குவே . இப்படிதான் பயந்து பயந்து ஸ்கூல் டாப்பரா வந்தே. ரிலாக்ஸா இரு“

“கிளம்புமா , ஹயக்ரீவர் கோவிலுக்குப் போலாம். மனசுக்குத் தெம்பா இருக்கும்“

“எனக்கு வேலை இருக்கு… அப்பாவிற்கு டிபன் பண்ணனும். நீ போயிட்டு வந்துடு”

“நீ வந்தாதான் எனக்கு ராசி. கேட்டரிங் மாமிக்கிட்ட டிபனுக்கு சொல்லிடறேன் . கிளம்பு“
மகளின் பிடிவாதம் தெரிந்த விமலா புறப்பட்டாள் “டூவீலர் ஓட்ட முடியாது. ஒரே படபடப்பா இருக்கு ஆட்டோல போலாம்மா”என்றபடி ஆட்டோவுக்குப் போன் செய்தாள்.

அர்ச்சனை முடிந்து வீட்டுக்கு வந்தும் ரிசல்ட் பற்றியே பேசிக்கொண்டு இருந்தாள். நடுவே சிநேகிதிகளோடு மொபைல் போனில் விசாரிப்புகள் வேறு. இரவெல்லாம் அப்பப்போ வாட்ஸ்அப், ஈமெயில் செக் பண்ணிக் கொண்டிருந்தாள்.

காலையில் “காலேஜுக்கு போயே ரிசல்டைப் பாத்துக்கறேன். இங்க இன்டர்நெட் கனெக்சன் மோசமா இருக்கு. தவிர பிரெண்ட்ஸ் கூட இருந்தா கவலை கொஞ்சம் குறையும்“ என அம்மாவிடம் சொல்லிவிட்டுக் கிளம்பினாள்.

ஒரு மணி நேரம் கழித்து சுஜாவிடமிருந்து போன் “அம்மா குட் நியூஸ் ஸ்வீட் ரெடி பண்ணு நான் கிளாஸ் எடுத்த மூணு சப்ஜெக்டிலும் எல்லாரும் பாஸாயிட்டாங்க. நூறு சதவிகித தேர்ச்சிக்கான விருது இந்த வருஷமும் எனக்கு நிச்சயம்“ என்றாள் தனியார் மகளிர் கல்லூரி ஆசிரியை சுஜாதா.

மாயநிழல்



அன்பாதவன்

ராஜேந்திரன் ஐசியூ வார்டில் நுழைந்தபோது இரவு ஒன்பதரை இருக்கலாம்.

ஸ்டெச்சரில் தள்ளிக்கொண்டு வந்த அனஸ்தீசியாக் கொண்டானை, கார்டியாக் ஐசியூ- வார்டுக்குள் செலுத்தப் படுக்கை தயாராகிறது. ராஜேந்திரன், ஐசியூவின் அங்கத்தினன் ஆகிய தருணமது!

ஆஹா! ராஜேந்திரன் இன்னமும் உயிரோடு... நலமோடு!

பிங்க்நிற சீருடைத்தரித்த செவிலியின் வாஞ்சையான குரலில், எங்கோ தூரத்திலிருந்தொலிப்பது போல, ராஜேந்திரனின் செவியுள் விழுந்தது!

“அப்பா... பசிக்குதாப்பா... கொஞ்சமாக்கஞ்சி தர்ரன்... மெதுவாக் குடிச்சுடுங்க!”

மயக்கத்தின் பிடியிலிருந்த ராஜேந்திரன், மய்யமாகத் தலையாட்டினான்!

‘கிர்ர்’ரென ஒரு சப்தம்! ராஜேந்திரன் பள்ளி கொண்டிருந்த படுக்கை சற்றே உயர்ந்தது! இப்போது அமர்ந்த கோலம்.

இளஞ்சிகப்புடைச் செவிலி, சிறியதொரு கோப்பையில் சுடுகஞ்சியை கொஞ்சங் கொஞ்சமாய் ஊட்டினாள்.! உப்பில்லாக் கஞ்சி வயிற்றினிலே! மெல்ல மெல்லப் பருகியவன் மீண்டும் அரைப்பிரக்ஞையில் ஆழ்ந்தான்!

“படுக்குறம்மா. முடியல!”

”சரிங்கப்பா... பசிச்சாக் கூப்புடுங்க.”

”சரிம்மா...!”- சாய்ந்தான். கண்கள் சொருகின. ஞாபகச்சுழலில் ராஜேந்திரன்.

அப்போதுதான் தொடங்கியது அந்த வாதை !.

என்னயிது..? ஏனிப்படி வியர்க்கிறது? வலது தோள் தொடங்கி இடது தோள் வரையில் மார்புப்பகுதியில் எரிச்சல் தொடங்கியது. எரிச்சலெனில் உள்ளுக்குள் யாரோ பெரியதொரு தீப்பந்தத்தால் சுடுவது போன்ற அனலெரிச்சல்... நெஞ்செரிச்சல்!

தண்ணீர் பாட்டிலை எடுத்தவன் மிடறுமிடறாக விழுங்க லேசாய் தணிந்தது போல் போக்குக்காட்டி மீண்டும் ஆரம்பித்தது மார்பெரிச்சல் .

ஒருபுறம் தாளமுடியாத நெஞ்செரிச்சல், இன்னொருபுறம் தலையிலிருந்து தணியாத வியர்வை. இதென்ன புதுசாய்... நோயா.. அல்லது ஏதாவது நோய்க்கான அறிகுறியா?

ஐயோ ! தாளமுடியாத எரிச்சல் !நெஞ்சுக்குள் ‘திகுதிகு’வென எரிவதை உணர முடிகிறது. ஆனால் நெஞ்செரிச்சல் என்ற ஒற்றைச் சொல்லைத்தவிர வேறெதையும் விவரிக்க முடியவில்லை.

ம்ஹூம்.. இனியும் தனியாயிருப்பது சரியல்ல ..!

மனைவியை அழைத்தவன் “எம்மா கொஞ்சம் சீரகத்தண்ணிக் கொதிக்க வை .. “ பேசியபடியே சோபாவில் சாய்ந்தான் .

“ஏங்க என்னவாச்சு ஏனிப்படி டல்லா இருக்கீங்க? தலையெல்லாம் வேர்க்குது. நல்லாத்தான இருந்தீங்க... என்ன செய்யுது உங்களுக்கு..?” கேள்வியின் நாயகியாய் மனைவி.

இளஞ்சூடாக சீரகத்தண்ணீர் தர, துளித்துளியாய் விழுங்கினான் ராஜேந்திரன். நெஞ்செரிச்சல் கொஞ்சம் பரவாயில்லைபோல இருந்தது, ஆனாலும் குறையவில்லை. 62 வயதுக்குண்டான அச்சம் ராஜேந்திரனைச் சூழ்ந்தது. இதுதான் மரண பயமா..? மரணம் தவிர்க்கவியலாது தான்... ஆனாலும் சில மரணங்கள் ராஜேந்திரனை உலுக்கி விடுகின்றன.

கடந்த மாதத்தில் ஒரே வாரத்தில் தொடர்ச்சியான சில மரணங்கள் அவன் மூளையின் உள்ளே போய் உட்கார்ந்து கொண்டு நகர்வதாயில்லை. சித்திமகன் கோபி, பக்கத்துவீட்டு லதாம்மாவின் தற்கொலை, சில மாதங்களுக்குமுன் மருத்துவமனையிலேயே இறந்துபோன சினேகிதன் இதயவேந்தனின் கடைசி நேரக் கண்கள், அந்திமழை இளங்கோவன்சாரின் அகாலமரணம் எனத்தொடர்ச்சியாய் அதிர்வலைகள். சரி இதையெல்லாம் மறக்கலாமென தொலைக்காட்சி இயக்கினால் இஸ்ரேலின் போர்வெறிக்கும் இனவெறிக்கும் பலியான காஸா மேற்குக்கரை குழந்தைகள். போர்விமானங்களுக்கு பள்ளிகளும் மருத்துவமனைகளும்தாம் குண்டு வீச மிகச்சிறந்த இடமோ?

யோசனைகளின் மேகத்திரள்கள்! யோசிக்க யோசிக்க நெஞ்சுக்குள் எரிச்சல் அதிகமானதைத் தவிர குறையவில்லை. நெஞ்செரிச்சல் ஓய்வதாயில்லை. உச்சந்தலையிலிருந்து வியர்வை அருவியுந்தான்.

தம்பி செந்திலின் கைப்பேசி அழைத்தது.” ஊருக்கு வந்துருக்கண்ணா... வர்ரயா வீட்டுக்கு?”

“காலையிலதான் பெங்களூர்லயிருந்து வந்தயா... மீனாட்சியும் வந்துருக்குதா?” என்றவனின் மங்கியக்குரலை உணர்ந்த செந்தில்” ஏண்ணா கொரலெல்லாம் டல்லா இருக்கு” என வினவ செந்திலிடம் மெல்லியதொனியில் நெஞ்செரிச்சல் விவரம் சொல்ல, அடுத்த பதினைந்தாவது நிமிஷம், தம்பியின் கார் ராஜேந்திரன் வீட்டு வாசலில் நின்றது.

“கௌம்புண்ணா சீக்கிரம்… டாக்டர் அருள்செல்வன் சார்கிட்ட அப்பாயின்மெண்ட் வாங்கியிருக்கேன். என்னன்னு செக் பண்ணிடுவோம்”

மிகமெதுவாக வழக்கமான மருந்துகளோடு பணமும் கடனட்டையும் எடுத்துக்கொண்டு தம்பியோடுக் கிளம்பினான்.

இதயநோய் நிபுணர் டாக்டர் அருள்செல்வன், ஈசிஜி-யில் தொடங்கி எக்கோ, ட்ரெல்மில் நடை என ஒன்றன்பின் ஒன்றாக சோதனைகளை மேற்கொண்டவர், தம்பியையையும் உள்ளே அழைத்தார்.

“சார்.. இது மைல்டுஅட்டாக்தான்… இப்போதைக்கு மாத்திர தர்ரேன், உடனடியா சென்னைக்கு கௌம்பிடுங்க.. எவ்ளோ சீக்கிரம் ரீச் ஆகிறிங்களோ அவ்ளோ சீக்கிரம் உங்க அண்ணனுக்கு நல்லது”

மாரடைப்பின் அறிகுறியை மரணத்தின் வருகையை நாசூக்காக கோடிட்டுக் காட்டியவர் மாத்திரைகளை அங்கேயே உட்கொள்ள வலியுறுத்தினார்.

நன்றிசொல்லி கிளம்பினர் இருவரும்… அதன்பின் நடந்ததெல்லாம் மாயயதார்த்தமெனில் மிகையில்லை.

அனஸ்தீசியா மருத்துவர் அருகில் வந்தார்.

“சார் ஒரு ஊசி போடுவேன் கொஞ்சநேரம் மயக்கமாயிருக்கும்.. பயப்பட ஒன்னுமில்ல சரிங்களா ”

“சரிங்க சார் ”

“எந்தூர் நீங்க”

“விழுப்புரம் சார் ”

“விழுப்புரத்திலிருந்தா இவ்ளோ தூரம் மெட்ராஸ்க்கு வரீங்க.. அங்கல்லாம் பெரிய ஹாஸ்பிடல் இல்லீங்களா…”

“ இருக்குங்க சார் , ஆனா கடந்த பத்து வருஷமா நம்ம ஹாஸ்பிடல் தான் அனுவல் உடல் பரிசோதனை செஞ்சுக்கிறேன்.. அதனாலதான் இங்கயே வந்தன்…”

“ ஓ வெரிகுட்… இன்ஜெக்க்ஷன் போட்டாச்சு… அப்படியே படுத்துருங்க… ஓகேவா..”

“ ஓகே சார் நன்றி சார்”

CATHLAB- என்பது இதயநோயாளிகளுக்கான பிரத்யேகமான சிகிச்சைக்கான இடம். இதயத்தின் இரத்தக்குழாய்களில் காணப்படும் அடைப்புகளை, ஆஞ்சியோ முறையில் கண்டறிந்து அதற்குரிய வகையில் ஆஞ்சியோ பிளாஸ்ட்டி சிகிச்சை மூலமாக ‘ஸ்டெண்ட்’ வைப்பதோ ‘பலூனிங்’ முறையிலோ தேவைப்படின் பைபாஸ் அறுவைச் சிகிச்சையோ… நோயாளியைப் பொறுத்து, சிகிச்சையும் வேறுபடும்.

ராஜேந்திரன் ஞாபகங்களின் பிடியிலிருந்து கொஞ்சங் கொஞ்சமாக நழுவிக் கொண்டிருந்தான். கேத்லேப் அறையிலிருந்த அதிகபட்ச பதனக்குளிரால் தலை வியர்வை குறைந்ததிருந்தது. இதயவலியும் தாங்குமளவில் இருந்தது. கண்கள் சொருகி கொஞ்சங்கொஞ்சமாக மயக்கநிலைக்கு பயணப்படுகிறான்.

மயக்கமா… உறக்கமா… கலக்கமா… துலக்கமா… அதீதவெளிச்சம், கூடுதல் குளிர், யாரோ நடக்கிறார்கள்… எவரோ எவரிடமோ எதையோ கேட்கிறார்கள்… இன்னொருவர் பதில் சொல்கிறார். ஒன்றும்புரியாத் தெளிவின்மை. மொழியின் குப்பை.

ராஜேந்திரனுக்குள் ஏதேதோ சிந்தனைகள் .

யார்நீ? நீயென்பது உருவமா அல்லது ஸ்தூல உடலா..? பெயரா… வடிவமா..! நீ ஆடைகளா… பதவியா..? படிப்பா…பணியா..? யார் நீ? அல்லது யார் நான்? அரூப மனசா… ஆத்மா ஜீவாத்மா… பரமாத்மா என்னும் தத்துவமசியா? எந்திரம் போல் உழைப்பவனா? சிந்திக்கும் எந்திரனா? இறப்பென்பது காற்புள்ளியா? முற்றுப்புள்ளியா..? கேள்விகளின் சுழலில் முங்கி மூச்சு முட்டியது ராஜேந்திரனுக்கு..!

INTENSIVE CARE UNIT - என்பது விரிவாக்கமென்றாலும் தன்னந்தனியானச் சின்னஞ்சிறு உலகம்! எல்லோருக்குமங்கே அனுமதியில்லை! தீவிர சிகிச்சைப் பிரிவென்பது உடல்நிலை மிகவும் சரியில்லாத மற்றும் சிறப்பு கவனமோ, ஆதரவோ தேவைப்படும் நோயாளிகளுக்கான சிறப்புச் சிகிச்சை மையமெனப் புரிந்து கொள்ளலாம்.

24மணிநேர மருத்துவர் / செவிலியர் சேவையுடன், வெண்டிலெட்டர் , அவசரகாலச் சிகிச்சைக்கேற்ற ஆக்சிஜன், இசிஜி, எக்கோ போன்ற உபகரணங்களின் உடனடிப் பயன்பாடும், நோயாளிகள் தொடர்ச்சியான கண்காணிப்பிலும் , முக்கிய மருந்துகளின் இருப்பும் , உயிர்காக்கும் உன்னத பணியை செவ்வனே செய்ய உதவுகிறது.

பயிற்சி பெற்ற மருத்துவர்களோடு மருத்துவ வல்லுநர்களின் ஆலோசனை, நவீனத் தொழில்நுட்பமும் இணைய, மகத்தான மனித உயிர்கள் காப்பாற்றப்படுவதான் ஐ.சி.யூ-வின் முக்கிய நோக்கமெனலாம்.

ஐசியூ- ஜோதியில் கலந்த இரண்டாம்நாள் காலை ஓங்கி உலகளந்த பெருமானாய் ஒரு மருத்துவர், கூடவே துணை மருத்துவர்கள் கூட்டம்.

“ குட் மார்னிங் மிஸ்டர் ராஜேந்திரன்.. ஹவ் யூ ஃபீல் நவ்..?”

“ பெட்டர் சார்”-சன்னக்குரலில் ராஜேந்திரன்.

நெஞ்சு முதுகு என ஸ்டெதஸ்கோப்பால் சோதித்தவர் , பிளட் சுகர், பிபி சோதனை அறிக்கை பார்த்தார்.

“ நல்லது ராஜேந்திரன் அவர்களே உங்கள் இருதயத்தின் ரத்தக்குழாய் ஒன்றில் இரு அடைப்பு இருப்பதை எங்கள் மருத்துவக்குழு உறுதி செய்திருக்கிறது. தற்காலிகமாய் தங்களுக்கு தீவிரச சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதை அறிவீர்கள் என்றாலும் தங்களுக்குப் பைபாஸ் ஆபரேஷன் சிகிச்சை உகந்ததென எங்கள் மருத்துவக்குழுக் கருதுகிறது. அதேநேரம் சிற்சிலச் சோதனைகளுக்குப் பிறகே இதுகுறித்து உறுதி செய்யப்படும் , அஞ்சவேண்டாம் நாங்கள் உங்களுடன் இருக்கிறோம்” என்றவரின் கோட்வில்லை அவர் பெயர் டாக்டர் மணிக்கண்ணன் என்றது.

தொடர்ச்சி அடுத்த இதழில்…

கண்ணாளனே...!

மலர்மதி
ஆவடி, சென்னை

உஷா ரவீந்தரை உயிருக்குயிராய் காதலிக்கிறாள். காதல் என்றால் கண்மூடித்தனமான காதல். தன் காதலை அடைய அவள் எந்த அளவுக்கும் போகத் துணிந்துவிட்டாள்.

அவள் காதலுக்கு வீட்டில் கடும் எதிர்ப்பு கிளம்பும் என்று அவளுக்கு நன்றாகத் தெரியும்.

ரவீந்தர் கொடுத்த ஐடியாபடி இன்றிரவு பணம், நகையுடன் வீட்டை விட்டு அவனுடன் ஓடிப்போக முடிவெடுத்துவிட்டாள்.

அதே நேரம் –

ரவீந்தர் தன் நண்பன் முத்துவுடன் பேசிக்கொண்டிருந்தான்.

“உண்மையா நீ உஷாவை மணந்துக்கொண்டு வாழப்போறியா?” என்று கேட்டான் முத்து.
“அடப்போடா பைத்தியக்காரா... அவள் கொண்டுவரும் நகை, பணம் முடிகிறவரையில் அவளுடன் ஜாலியா இருந்துட்டு, கம்பியை நீட்டிடமாட்டேன்?” என்று சொல்லி சிரித்தான் ரவீந்தர்.

“உனக்கு கொஞ்சங்கூட கடவுள் பயம் இல்லையா?”

“பயந்தால் அனுபவிக்க முடியாது தலைவா!”

“அடப்பாவி!”

அன்றிரவு பெட்டியுடன் ரவீந்தர் சொன்ன இடத்தில் காத்திருந்தாள் உஷா.

ரவீந்தர் ரெடியாகி சீட்டியடித்தவாறே தன்னை மறந்த நிலையில் உஷாவின் வாழ்வை நாசப்படுத்தும் குரூர எண்ணத்தில் மிதந்தவாறு நடந்தான்.

யாருமற்ற சாலையை அவன் கடக்க முயன்றபோது அசுரவேகத்தில் வந்த லாரி ஒன்று அவன் மீது மோதியது. சம்பவ இடத்திலேயே உயிர் பறிபோனது.

சாட்சி ஒன்றும் இல்லை என்பதை உறுதிபடுத்திக்கொண்ட லாரி டிரைவர் வண்டியை நிறுத்தாமல் பறந்துவிட்டான்.

இதையறியாத உஷா தன் கண்ணாளனின் வருகைக்காகக் காத்திருந்தாள்.



ஊதக்காத்து

உமா ஸ்வாமிநாதன்
பெங்களூரு

நெல்லு மூட்டை
நான் சுமக்கையிலே
சிறுதுளி தூறல்
என்மேல் விழ...
மண் வாசனையோடு
வந்த ஊதக்காற்று
குயிலும் கூவையிலே
நாணலும் தலைசாய...
சாரல்களோடு சில்லென்ற
காற்று சிலிர்க்குதடி
இதமான குளிருடன்
என்மேனி நடுங்க...
மெதுவாய் இதமாய்
வீசுகிறாய் என்மீது
வீதிவழி போகையிலே
மாமன் மகளே
மனசுக்குள் மத்தாப்பு
பூக்குதடி உன்நினைவால்
ஒய்யார நடைநடந்து
நீ போகையிலே
கருமேகக் கூந்தலில்
மல்லிகையும் மணக்க
கெண்டை காலின்
கொலுசு சத்தம்
முத்துப்பல் சிரிப்பழகி
காந்தக் கண்ணழகி
நீயுந்தான் துணைக்கு
வரியா வீட்டுப்பக்கம்
ஊதக்காற்றில் பாரிஜாதம்
மலர்ந்து சொக்கவைக்குதடி
கைகோர்த்து போவோம்
குளிர்காற்று தாங்கலையே

GALAXY BOOK
SELLERS & PUBLISHERS

புதிய புத்தகம்,
புதிய சிந்தனை

MORE THAN JUST A BOOK SHOP

புத்தகங்கள் வாங்க கேலக்ஸி வாட்ஸாப் எண்ணில் தொடர்பு கொள்ளவும்.
+91 99944 34432